
# பதுளை சரஸ்வதி தேசிய கல்லூரி

## ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்

# மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்



**20-03-2000**

வெளியீடு :- ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில், சரஸ்வதி தேசிய கல்லூரி – பதுளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதுளை சரஸ்வதி தேசிய கல்லூரியின்
கும்பாபிஷேக விழா சிறப்புற
வாழ்த்துகின்றோம்.

# எட்னா ஸ்டோர்ஸ்
# EDNA STORES

இல: 38, தெற்கு வீதி,
பதுளை.

No: 38, South Lane,
Badulla.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதுளை சரஸ்வதி தேசிய கல்லூரி

## ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்

# மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்



வெளியீடு :

ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்

சரஸ்வதி தேசிய கல்லூரி

பதுளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# விநாயகப் பெருமானின் மூர்த்தங்கள்

வாழ்வில் இருள்போக்கித் தன்னை நாடி வருவோருக்குத் தத்துவ சொருபமாக அமர்ந்திருந்து அடியார்களின் விக்கினங்கள் தீர்த்து அருள்பாலித்துக் கொண்டிருப்பவர் விநாயகப்பெருமான்.

இவ்விநாயகப் பெருமானுக்குப் பல்வேறு திருவுருவங்களுண்டு .இவை ஒவ்வொன்றும் பக்திவழி நின்று வழிபடுவோருக்குப் பேரின்பத்தையும் ஈடேற்றத்தினையும் கொடுக்கும் வகையில் திருவிளையாடல்கள் புரிந்த திருவுருவங்கள் ஆகும். இவ்வாறு அடியார்களது உள்ளப் பெருங்கோயிலில் நீக்கமற நிறைந்திருக்கும் பொருட்டு விநாயகப் பெருமானின் முப்பத்திரண்டு மூர்த்தங்களும் அவற்றின் தத்துவங்களும் இங்கே தரப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1. பாலகணபதி




2. தருண கணபதி

உதிக்கின்ற செங்கதிர் நிறத்துடன் குழந்தைத் திருமேனி உடையவர். நான்கு கரங்கள் உடையவராகவும் அவற்றில் வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், கரும்பு ஆகியவற்றை உடையவராகவும் அமைந்திருப்பர். துதிக்கையில் மோதகம் உடையவர்.

சிவந்த திருமேனி உடையவர். எட்டுத் திருக்கரங்களுடையவராகவும் அவற்றிலே பாசம், அங்குசம், மோதகம், விளாம்பழம், நாவற்பழம், ஒடிந்ததன் கொம்பு, நெற்கதிர், கரும்பு இவற்றை தாங்கியவராகவும் காணப்படுவார்.



3. பக்தி கணபதி




4. வீர கணபதி

பூரணச் சந்திரன் போன்ற வெண்ணிறமுடையவர். தம் நான்கு திருக்கரங்களில் தேங்காய், மாம்பழம், வாழைப்பழம், பாயஸ பாத்திரம் ஆகியவற்றை உடையவராகக் காணப்படுவார்.

சிவந்த நிறமும் வீரத்தோற்றத்துடனும் காணப்படுவார். தமது பதினாறு திருக்கரங்களில் வேதாளம், வேல், அம்பு, வில், சக்கரம், கத்தி, கேடகம், சம்மட்டி, கதை, அங்குசம், நாகம், சூலம், குந்தாலி, மழு, கொடி ஆகியவற்றை உடையவராக உள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




5. சக்தி கணபதி

சிவந்த நிறமுடைய இவர் பச்சை நிற மேனியுடைய தேவியைத் தழுவிக் கொண்டு இருப்பார்.




6. துவிஜ கணபதி

வெண்மையானவர். நான்கு யானை முகங்களை உடையவர். நான்கு திருக்கரங்களிலும் புத்தகம், அட்சமாலை, தண்டம், கமண்டலம் ஆகியவற்றை உடையவராகக் காணப்படுவார்.



7. சித்தி கணபதி

பொன்னிற மேனியர். துதிக்கை உட்பட ஐந்து கைகளிலும் மாம்பழம், கரும்புத்துண்டு, எள்ளுருண்டை, பரசு முதலியவற்றை உடையவராக விளங்குவார்.




8. உச்சிஷ்ட கணபதி

நீலத் திருமேனி உடையவர். தம் கரங்களில் நிலோற்பலம், மாதுளம்பழம், வீணை, நெற்கதிர், அட்சமாலை முதலியவற்றை உடையவராகக் காணப்படுவார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




9. விக்ன கணபதி

பொன்னிறமேனியர். பலவிதமான ஆபரணங்களை அணிந்தவராகக் காணப்படுவார். சங்கு, கரும்புவில் புஷ்பபாணம், கோடரி, பாசம், சக்கரம், கொம்பு, மாலை, பூங்கொத்து, பாணம் முதலியவற்றைத் தம் திருக்கரங்களில் ஏந்தியவர்.



10. க்ஷிப்ர கணபதி

சிவந்த மேனியர். தம் திருக்கரங்களிலே தந்தம், கற்பகக் கொடி, பாசம், ரத்னகும்பம், அங்குசம் ஆகியவற்றை ஏந்தியவராகக் காணப்படுவார்.



11. ஏரம்ப கணபதி


கருமை நிறமேனியர். ஐந்து முகம் உடையவர். சிங்கவாகனத்தில் அமர்ந்தவர். அபயம், வரதம் முதலிய கரங்களை உடையவர். பாசம், தந்தம், அட்சமாலை, பரசு, சம்மட்டி, மோதகம், பழம் ஆகியவற்றைத் தாங்கியவர்.



12. லக்ஷ்மி கணபதி

வெண்மை நிறமுடைய மேனியர் எட்டுத் திருக்கரங்களிலுங் கிளி, மாதுளம்பழம், கலசம், அங்குசம், பாசம், கற்பகக் கொடி, கட்கம், வரதம் ஆகியவற்றைத் தாங்கியவர். நீலநிறத் தாமரைப் பூ ஏந்திய இரு தேவியரோடு வீற்றிருப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



13. மஹா கணபதி

சிவந்த மேனியர். முக்கண் உடையவர். பிறை சூடியவர். தமது கரங்களில் மாதுளம்பழம், கதை, கரும்பு வில், சக்கரம், தாமரை, பாசம், நீலோற்பலம், நெற்கதிர், தந்தம், ரத்னகலசம் ஆகியவற்றைத் தாங்கியவராகக் காணப்படுவார்.




14. விஜய கணபதி

செந்நிற மேனியர். பெருச்சாளி வாகனத்தில் அமர்ந்திருப்பார். பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் ஆகியவற்றைத் தாங்கியிருப்பார்.



15. நிருத்த கணபதி

பொன்னிறமேனியர். கற்பக விருட்சத்தினடியில் எழுந்தருளியிருப்பார். நடனமாடும் தோற்றமுடையவர். மோதிரமணிந்த விரல்களையுடைய கைகளில் பாசம், அங்குசம், அபூபம், கோடரி, தந்தம் ஆகியவற்றை உடையவர்.




16. ஊர்த்துவ கணபதி

பொன்னிற மேனியர். பச்சை நிற மேனியை உடைய தேவியைத் தழுவியிருப்பார். தம் கரங்களில் நீலப்பூ, நெற்பயிர், தாமரை, கரும்புவில், பாணம், தந்தம் இவற்றை உடையவராகக் காணப்படுவார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




17. ஏகாட்சர கணபதி

செந்நிறமேனியர். செந்நிறப்பட்டாடையும் செந்நிற மாலையும் அணிந்து பத்மாசனத்தில் அமர்ந்திருப்பார். முக் கண்ணர். குறுந்தாளர். குறுங்கையர். பெருச்சாளியை வாகனமாக உடையவர். தமது கரங்களில் மாதுளம் பழம், பாசம், அங்குசம், வரதம் ஆகியவற்றை ஏந்தியவராகக் காணப்படுவார்.




18. வர கணபதி

சிவந்த மேனியர். முக் கண்ணர். பிறை சூடியவர். தமது கரங்களிற் பாசம், அங்குசம், தேன்நிறைந்த கபாலம் ஆகியவற்றைத் தாங்கியவராகக் காணப்படுவார்.



19. திரயாக்ஷர கணபதி

பொன்னிற மேனியர். துதிக்கை நுனியில் மோதகம் உடையவர். தம் நான்கு கரங்களிலும் பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் ஆகியவற்றை உடையவராகக் காணப்படுவார்.



20. க்ஷிப்ர கணபதி

தம் கரங்களில் பாசம், அங்குசம், கல்பலதா, மாதுளம்பழம், தாமரை, தருப்பை, விஷ்டரம் ஆகியவற்றை உடையவராகக் காணப்படுவார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



21. ஹரித்திராகணபதி

மஞ்சள்நிறமேனியர். தம் நான்கு திருக்கரங்களிற் பாசம், அங்குசம், தந்தம், மோதகம் ஆகியவற்றை உடையவராகக் காணப்படுவார்.



22. ஏகதந்தகணபதி

நீலநிறமேனியர். கோடரி, அட்சமாலை, லட்டு, தந்தம் ஆகியவற்றைத் தம் கரங்களில் ஏந்தியவராகக் காணப்படுவார்.



23. சிருஷ்டிகணபதி

சிவந்தமேனியர். பாசம், அங்குசம், தந்தம் மாம்பழம் ஆகியவற்றைத் தம் கரங்களில் ஏந்தியவராகக் காணப்படுவார்.




24. உத்தண்ட கணபதி

சிவந்தமேனியர். தாமரைமலர் ஏந்திய பச்சை மேனியளாகிய தேவியை அருகில் உடையவர். தமது பத்துத் திருக்கரங்களிலே தாமரை, மாதுளம்பழம் , கதை, தந்தம், கரும்பு, வில், ரத்னகலசம், பாசம், நெற்கதிர், மாலை ஆகியவற்றை உடையவராகக் காணப்படுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



25 ரணமோசனகணபதி




26 துண்டிகணபதி


வெண்பளிங்கு மேனியர். செந்நிறப்பட்டாடை தரித்தவர். தம் கரங்களில் பாசம், அங்குசம், தந்தம், நாவற்பழம் ஆகியவற்றை ஏந்தியவராகக் காணப்படுவார்.

தம் கரங்களில் அட்சமாலை, கோடரி, ரத்னகலசம் தந்தம் ஆகியவற்றை உடையவராகக் காணப்படுவார்.

27.. க்ஷிப்ரப்ரஸாத



27. துவிமுககணபதி



28. மும்முககணபதி

இரண்டு முகமுடையவராய், நீலநிறமேனியராய், செம்பட்டாடை தரித்து, ரத்ன கிரீடத்துடன் காணப்படுவார். தம் கரங்களிலே தந்தம், பாசம், அங்குசம் ரத்னபாத்திரம் ஆகியவற்றை உடையவர்.


மூன்று முகங்களைக் கொண்டவராய், சிவந்தமேனியராய் பொற்றாமரை ஆசனத்தில் எழுந்தருளியிருப்பார். வலது கைகளிற் கூரிய அங்குசம், அட்சமாலை, வரதம், ஆகியவற்றை உடையவர். இடது கைகளில் பாசம், அமுதகலசம், அபயம் என்பவற்றை உடையவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




29 சிங்ககணபதி




30 யோககணபதி

வெண்ணிற மேனியர். சிங்கவாகனத்தில் எழுந்தருளியிருப்பார். வலது கைகளில் வீணை, கற்பகக் கொடி, சிங்கம், வரதம் என்பவற்றை உடையவர். இடது கைகளில் தாமரை ரத்னகலசம், பூங்கொத்து அபயம் ஆகியவற்றை உடையவர்.

யோகநிலையில் யோகப்பட்டம் தரித்துக் காணப்படுவார். இந்திரநீலநிற ஆடை அணிந்தவர். பாசம், அட்சமாலை யோகதண்டம், கரும்பு ஆகியவற்றைத் தம் கரங்களில் ஏந்தியவாறு இருப்பார்.



31. துர்க்காகணபதி



32. சங்கடஹரகணபதி

பசும் பொன்னிறமான பெரியதான மேனியை உடையவர். சிவந்த ஆடை அணிந்தவர். தம் எட்டுக் கைகளில் வலது கைகளில் அங்குசம், பாணம், அட்சமாலை, தந்தம் என்பனவற்றையும் இடது கைகளிற் பாசம், வில், கொடி, நாவற்பழம் ஆகியவற்றையும் உடையவர்.

நீலநிற ஆடை அணிந்த நீலநிறமேனியர். நீலப் பூவை ஏந்திய பச்சைமேனியளான தேவியை இடது தொடையில் உடையவர். செந்தாமரைப் பீடத்தில் அமர்ந்தவர். வலதுகையில் அங்குசம், வரதம் ஆகியவற்றை ஏந்தியவர். இடது கையில் பாசம், பாயசபாத்திரம் என்பனவற்றை ஏந்தியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துதிப் பாடல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## பஞ்சபுராணம்

### தேவாரம்

அன்னம் பாலிக்குந் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்குமோ இப் பிறவியே.

### திருவாசகம்

அன்றே என்தன் ஆவியும்
உடலும் உடமை எல்லாமும்
குன்றே அனையாய் என ஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே

### திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தளிவளர் பளிங்கின் திரள் மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்பு மா விளம்பே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி மீசற்காட்
செய்மின் குழாம் புகுந்
தண்டங் கடந்த பொருள் அளவில்லா தோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள் என்றே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்க ணான்குஞ்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந்
திருந்துசாத் துவிகமேயாக
இந்துவாழ் சடையா னாடுமானந்த
செல்லையில் தனிப் பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துட் டிளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி யப்பமொ டவல் பொரி
கப்பிய கரிமுக ணடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியிலுறைபவர்
கற்பக மென வினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடு மரன் மகன்
மற்றொரு திருள் புஜ மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர் கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரி செய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா
அத்துயரது கொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மண மருள் பெருமானே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஔவைப் பிராட்டியார் அருளிய

# விநாயகர் அகவல்

## ஆசிரியப்பா

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும் பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்டநீல மேனியும்
நான்ற வாயு நாலிரு புயமும்
மூன்று கண்ணு மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் ஈன்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரும் மூஷிக வாகன !
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளத்தினிற் புகுந்து
குருவடிவாகிக் குவலயந் தன்னில்தி
ருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந் தெனக் கருளிக்
கோடாயுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்கிசை நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறிவித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முகமாக இனிதெனக் கருளி
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக் கொன்றிடமென்ன
அருள் தரும் ஆனந்தத் தழுத்திஎன் செவியில்
எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவுக் கணுவாய் அப்பாலுக் கப்பா லாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக ! விரைகழல் சரணே !

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் கவசம்

(இது முத்தல முனிவருக்கு காசிய மகரிஷி உபதேசித்து இதைத்
தமிழில் கச்சியப்ப சுவாமிகள் பின்வருமாறு பாடித்தந்துள்ளார்)

வளர்ச்சிகைப் பராபரமாய் வயங்குவிநா
யகர்காக்க; வாய்ந்த சென்னி
அளவுபடா அதிகசவுந் தரதேகம்
மதோற்கடர்தாம் அமர்ந்து காக்க;
விளரறநெற் றியைஎன்றும் விளங்கியகா
சிபர்காக்க; புருவம் தம்மைத்
தளர்வில் மகோதரர் காக்க; தடவிழிகள்
பாலச் சந்திரனார் காக்க; 1

கவின் வளரும் அதரங்கச முகர்காக்க;
தால் அங்கணக் கிரீடர் காக்க ;
நலில் சிபுகம் கிரிசைசதர் காக்க ; நனி
வாக்கைவிநா யகர்தாம் காக்க ;
அவிர் நகைதுன் முகர்காக்க ; அள்ளெழிற்செஞ்
செவிபாச பாணி காக்க ;
தவிர்தலுறா திளங்கொடிபோல் வளர்மணிநா
சியைச் சிந்தி தார்த்தர் காக்க ; 2

காமருபூ முகந்தன்னைக் குணேசர்நனி
காக்க ; களங்கணேசர் காக்க
வாமமுறும் இருதோறும் வயங்குகந்த
பூர்வசர் தாம் மகிழ்ந்து காக்க ;
ஏமமுறு மணிமுலைவிக் கினவிநா
சன்காக்க ; இதயந் தன்னைத்
தோமலுங் கணநாதர் காக்க ; அகட்
டினைத் துலங்கே ரம்பர் காக்க ; 3

பக்கமிரண் டையுந்தரா தரர்காக்க ;
பிருட்டத்தைப் பாவம் நீக்கும்
விக்கினக ரன்காக்க ; விளங்கிலிங்கம்
வியாளபூ டணர்தாம் காக்க ;
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்க ; சகனத்தை அல்லல்
உக்கண பன்காக்க ; ஊருவைமங்
களமூர்த்தி உவந்து காக்க ; 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமுழந்தாள் மகாபுத்தி காக்க ; இரு
பதம் ஏக தந்தர் காக்க ;
வாழ்கரம்கிப் பிரப்பிரசா தனர்காக்க ;
முன்கையை வணங்குவார் நோய்
ஆழ்தரச்செய் ஆசாபூ ரகர்காக்க ;
விரல்பதும அத்தர் காக்க ;
கேழ்கிளரும் நகங்கள்விநா யகர்காக்க ;
கிழக்கினிற்புத் தீசர் காக்க ; 5

அக்கினியில் சித்தீசர் காக்க ;
உமாபுத்திரர் தென்திசை காக்க ;
மிக்கநிரு திதிற்கணே சுரர்காக்க ;
விக்கினவர்த் தனர்மேற் கென்னுந்
திக்கதனிற் காக்க ; வாயுவிற்கசகன்
னர்காக்க ; திகழ்உ தீசி
தக்கநிதி பன்காக்க ; வடகிழக்கில்
ஈசநந் தன்ரே காக்க ; 6

ஏகதந்தர் பகல்முழுதும் காக்க ; இர
வினும்சத இரண்டன் மாட்டும்
ஒகையின்விக் கினகிருது காக்க ; இராக்
கதர்பூதம் உறுவே தாளம்
மோகினிபேய் இவையாதி உயிர்த்திற த்தால்
வருந்துபரும், முடிவி லாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபு பா
சாங்குசர்தாம் விரைந்து காக்க ; 7

மதி, ஞானம், தவம், தானம், மானம், ஒளி
புகழ், குலம், வன்சரீரம், முற்றும்
பதிவான தனம், தானி யம், கிரகம்
மனைவி, மைந்தர், பயில்நட் பாதிக்
கதியாவும் கலந்துசர்வா யுதர்காக்க ;
காமர்பவுத் திரர்முன் னான
விதியாரும் சுற்றமெலாம் மயூரேசர்
எஞ்ஞான்றும் விரும்பிக் காக்க ; 8

வென்றி, சீவிதங் கபிலர் காக்க ; கரி
யாதியெலாம் விகடர் காக்க ;
என்றிவ்வா றிதுதனைமுக் காலமும்
ஓதிடின் நும்பால் இடையூ றொன்றும்
ஒன்றுறா ; முனிவரர்கள் ; அறிமின்கள் ;
யார் ஒருவர் ஓதினாலும்
மன்றவாங் கவர்தேகம் பிணியற ; வச்
சிரதேகம் ஆகி மன்னும். 9

*(விநாயகர் கவசம் முற்றிற்று)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

## சிவபுராணம்

*தொல்லை இரும் பிறவிச் சூழும் தளைநீக்கி*
*அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே – எல்லை*
*மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்*
*திருவாசகம் என்னும் தேன்.*

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள் மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈசன்அடி போற்றி எந்தை அடிபோற்றி
தேசன்அடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன்அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன்அடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயஉரைப் பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார்கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்ஆயின எல்லாம் போய்அகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்றமறை யோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்துஎங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசம்ஆம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாம் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்குஅரிய நோக்கே நுணுக்குஅரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும்இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றுஇன்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வா
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஓ என்றுஎன்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டுஇங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

*திருச்சிற்றம்பலம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீச்சரம்

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம்

*பண் - நட்டராகம்*

*திருச்சிற்றம்பலம்*

விருது குன்றமா மேருவி னாணர
வாவன லெரியம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்
றுறைபதி யெந்நாளும்
கருது கின்றவூர் சகைகடற் கடிகமழ்
பொழிலணி மாதோட்டம்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக்
கடுவினை யடையாவே. (க)

பாடல் வீணையர் பலபல சரிதைய
ரெருதுகைக் தருநட்டம்
ஆடல் பேணுவ ரமரர்கள் வேண்டநஞ்
சுண்டிருள் கண்டத்தர்
ஈட மாவது விருங்கடற் கரையினி
லெழிறிக மாதோட்டம்
கேடி லாதகே தீச்சரந் தொழுதெழக்
கெடுமிடர் வினைதானே. (உ)

பெண்ணொர் பாகத்தர் பிறைதவர் சடையின
ரறைகழல் சிலம்பார்க்கச்
சுண்ண மாதரித் தாடுவர் பாடுவ
ரகந்தொறு மிடுபிச்சைக்
குண்ண லாவதோ ரிச்சையி னுழம்பவ
ருயர்தரு மாதோட்டத்
தண்ண லண்ணுகே தீச்சர மடைபவர்க்
கருவினை யடையாவே. (௩)

பொடிகொண் மேனியர் புலியத ளரையினர்
விரிதரு கரத்தேந்தும்
வடிகொண் மூவிலை வேலினர் நூலினர்
மறிகடன் மாதோட்டத்
தடிக ளாதரித் திருந்தகே தீச்சரம்
பரிந்தசிந் தையராகி
முடிகள் சாய்ந்தடி பேணவல் லார்தம்மேன்
மொய்த்தெழும் வினைபோமே. (ச)

நல்ல ராற்றவு ஞானநன் குடையர்தம்
மடைந்தவர்க் கருளீய
வல்லர் பார்மிசை வான்பிறப் பிறப்பிலர்
மலிகடன் மாதோட்டத்
தெல்லை யில்புக ழெந்தைகே தீச்சர
மிராப்பக னினைந்தேத்தி
அல்ல லாசறுத் தரனடி யிணைதொழு
மன்பரா மடியாரே. (ரு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேழை வார்சடைப் பெருந்திரு மகடனைப்
பொருந்தவைத் தொருபாகம்
மாழை யங்கயற் கண்ணிபா லருளிய
பொருளினர் குடிவாழ்க்கை
வாழை யம்பொழின் மந்திகள் களிப்புற
மருவிய மாதோட்டக்
கேழல் வெண்மருப் பணிந்தநீண் மார்பர்கே
தீச்சரம் பிரியாரே. (கூ)

பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப்பல்
லுலகினி லுயிர்வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடங் கைதொழக்
காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப் பொழின்மஞ்ஞை
நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாடொறுற் துதிசெய வருள்செய்கே
தீச்சர மதுதானே. (எ)

தென்னி லங்கையர் குலபதி மலைநலிந்
தெடுத்தவன் முடிதிண்டோள்
தன்ன லங்கெட வடர்த்தவற் கருள்செய்த
தலைவனார் கடல்வாயப்
பொன்னி லங்கிய முத்துமா மணிகளும்
பொருந்திய மாதோட்டத்
துன்னி யன்பொடு மடியவ ரிறைஞ்சுகே
தீச்சரத் துள்ளாரே. (அ)

பூவு ளானுமப் பொருகடல் வண்ணனும்
புவியுடந் தெழுந்தோடி
மேவி நாடிநுன் னடயிணை காண்கிலா
வித்தக மென்னாகும்
மாவும் பூகமுங் கதலியு நெருங்குமா
தோட்டநன் னகர்மன்னித்
தேவி தன்னொடுந் திருந்துகே தீச்சரத்
திருந்தவெம் பெருமானே. (கூ)

புத்த ராய்ச்சில புனைதுகி லுடையவர்
புறனுரைச் சமணாதர்
எத்த ராகிநின் றுண்பவ ரியம்பிய
வேழைமை கேளேன்மின்
மத்த யானையை மறுகிட வுரிசெய்து
போர்த்தவர் மாதோட்டத்
தத்தர் மன்னுபாலாவி யின் கரையிற்கே
தீச்சர மடைமின்னே. (க0)

மாடெ லாமண முரசெனக் கடலின்
தொலிகவர் மாதோட்டத்
தாட லேறுடை யண்ணல்கே தீச்சரத்
தடிகளை யணிகாழி
நாடு ளார்க்கிறை ஞானசம் பந்தன்சொன்
னவின்றெழு பாமலைப்
பாடலாயின பாடுமின் பக்தர்கள்
பரகதி பெறலாமே. (கக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்

*பண் - நட்டபாடை*

*திருச்சிற்றம்பலம்*

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வய்
மத்தம்மத யானைபுரி போத்தினை வாளன்
பத்தாகி தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்றிருக் கேதீச்சரத் தானே. (க)

சடுவார்பொடி நீறுநல்ல துண்டர்பிறைக் கீளும்
சாமர்களி யானைபுரி யணிந்தகறைக் கண்டன்
படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமாயுறை கின்றுன்றிருக் கேதீச்சரத் தானே. (உ)

அங்கம் மொழி யன்னாரவ ரமரர்தொழு தேத்த
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண்ணர வசைத்தான்றிருக் கேதீச்சரத் தானே. (ங)

கரியகறைக் கண்டன்னல கண்டமேலொரு கண்ணான்
வரியசிறை வண்டியாழ்செயு மாதோட்டநன் னகருள்
பரியதிரை யெறியாவரு பாலாவியின் கரைமேற்
தெரியும்மறை வல்லான்றிருக் கேதீச்சரத் தானே (ச)

அங்கத்துறு நோய்களடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரிற்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம் பொழில் சூழ்ந்திருக் கேதீச்சரத் தானே. (ரு)

வெய்யவினை யாயவ்வடி யார்மேலொழித் தருளி
வையமலி கின்றகடன் மாதோட்டநன் னகரில்
பையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான்றிருக் கேதீச்சரத் தானே. (சு)

ஊனத்துறு நோய்களடி யார்மேலொழித் தருளி
வானத்துறு மலியுங்கடன் மாதோட்டநன் னகரிற்
பானத்துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயி றணிந்தான்றிருக் கேதீச்சரத் தானே. (எ)

அட்டன்னழ காகவவரை தன்மேலரா வார்த்து
மட்டுண்டுவண் டாலும் பொழின் மாதோட்ட நன்னகரிற்
பட்டவரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்
சிட்டன்னமை யாள்வான்றிருக் கேதீச் சரத்தானே. (அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவரென விருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழின் மாதோட்டநன் னகரிற்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவனெனை யாள்வான்றிருக் கேதீச்சரத் தானே. (கூ)

கறையார் கடல் சூழ்ந்தவழி மாதோட்டநன் னகருள்
சிறையார்பொழில் வண்டியாழ்செயுங் கேதீச்சரத் தானை
மறையார்புக மூரன்னடித் தொண்டன்னுரை செய்த
குறையாத்தமிழ் பத்துஞ்சொல்லக் கூடாகொடு வினையே (க0)

*திருச்சிற்றம்பலம்*

## சுந்தரர் தேவாரம் (திருநாட்டுத் தொகை)

*திருச்சிற்றம்பலம்*

ஈழநாட்டுத் மாதோட்டந் தென்னாட்டி ராமேச்சரஞ்
சோழநாட்டுத் துருத்தி நெய்த்தானந் திருமலை
ஆழியூரன நாட்டுக் கெல்ல மணியாகிய
கீழையில் லரனார்க் கிடங்கிள்ளி குடியதே

*திருச்சிற்றம்பலம்*

## திருநாவுக்கரசர் தேவாரம்

*திருச்சிற்றம்பலம்*

பூமியணி பொன்னிறத்தர் பூண நூலர்
பொங்கரவர் சங்கரர் வெண்குழையோர் காதர்
கேதீச்சரமேவினார் கேதாரத்தார்
கெடில வடவதிகை வீரட்டத்தார்
மாதுயரந் தீர்த்தென்னை யுய்யக் கொண்டார்
மழபாடிமேய மழுவாளனார்
வேதி குடியுள்ளார் மீயச் சூரார்
வீழி மிழலையே மேவினாரே.

*திருச்சிற்றம்பலம்*

## சேக்கிழார் பெரிய புராணம்

*திருச்சிற்றம்பலம்*

அந்நகரில் அமர்ந்தங்கண் இனிது மேவி
ஆழிபுடை சூழ்தொலிக்கும் ஈழந்தன்னில்
மன்னுதிருக் கோணமலை மகிழ்ந்து செங்கண்
மழவிடையார் தமைப்போற்றி வணங்கிப்பாடிச்
சென்னிமதி புனைமாட மாதோட்டத்தில்
திருக்கேதீச்சரத் தண்ணல் செய்யபாத
உன்னிமிகப் பணிந்தேத்தி அன்பரோடும்
உலவாத கிழிபெற்றார் உவகையுற்றார்.

*திருச்சிற்றம்பலம்*

மன்னுமிரா மேச்சரத்து மாமணியை முன்வணங்கிப்
பன்னுதமிழ்த் தொடைசாத்திப் பயில்கின்றார் பாம்பணிந்த
சென்னியர்மா தோட்டத்துத் திருக்கேதீச்சரஞ் சார்ந்த
சொன்மலர்மா லைகள்சாத்தித் தூரத்தே தொழுதெழுந்தார்.

*திருச்சிற்றம்பலம்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலைத் திருப்பதிகம்

## திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் அருளிச் செய்தது

*பண் - புறநீர்மை*

*திருச்சிற்றம்பலம்*

1. நிரைகழல் அரவம் சிலம்பொலி யலம்பும்
நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவு
மளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் லோத நித்திலங் கொழிக்குங்
கோணமாமலை அமர்ந்தாரே.

2. கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பார்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடும் உடனாய்க்
கொடிதெனக் கதறும் குரைகடல் சுமந்து
கொள்ளமும் நித்திலங் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தேன்றுங்
கோணமாமலை அமர்ந்தாரே.

3. பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாகமாக
முன் கலந்தவர் மதின்மேல்
தனித்த பேருருவ விழித்தழல் நாகத்
தாங்கிய மேரு வெஞ்சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணாமலைல அமர்ந்தாரே.

4. பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் தேவிவேண்ட முன்கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெளித்தமுன் அரற்றுஞ் செழுங்கடற் றரளஞ்
செம்பொனும் இப்பியும் சுமந்து
கொழித்துவன் திரைகள் கரையிடைச் சேர்க்குங்
கோணமாமலை அமர்ந்தாரே.

5. தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினு மனத்து மருவிநின் றகலா
மாண்பினர் காள் பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பா நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை அமர்ந்தாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பரிந்துநன் மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடாவண்ணம் முதைத்தவற் கருளுஞ்
செம்மையார் நம்மை யாளுடையார்
விரிந்துயர் மௌவன் மாதவி புன்னை
வேங்கை வண்செருந்தி செண்பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணாமாமலை அமர்ந்தாரே.

7. எடுத்தவன் நருக்கை யிழித்தவர் விரலால்
லேத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பு
மிறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும் புகழாளர்
கோணாமாமலை அமர்ந்தாரே.

8. அருவரா தொருகை வெண்டலை ஏந்தி
யகந்தொறும் பலியுடன் புக்க
பெருவராயுறையும் நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணும் பிரமன்
இருவரும் அறியாவண்ணம் ஒள் எரியா
யுயர்ந்தவர் பெயர்த்த நன் மாற்கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணாமாமலை அமர்ந்தாரே.

9. நின்றுணுஞ் சமணு இருந்துணந் தேரு
நெறியலாதன புறங்கூற
வென்று நஞ்சுண்ணும் பரிசின ரொருபான்
மெல்லியலொடும் உடனாகித்
துன்றுமொன் பௌவ மௌவலுஞ் சூழ்ந்து
தாழ்ந்தறு திரைபல மோதிக்
குன்றுமொன் கானல் வாசம் வந்துலவும்
கோணாமாமலை அமர்ந்தாரே.

10. குற்றமில்லாதார் குரைகடல் சூழ்ந்த
கோணாமாமலை அமர்ந்தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞான சம்பந்தன்
உற்ற செந்தமிழர் மாலை ஈரைந்தும்
உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்
சுற்றமுமாகித் தொல்வினை அடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே.

*திருச்சிற்றம்பலம்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# திருப்பள்ளியெழுச்சி

## எண்சீர்க் கழுநெடிலடிசிரிய விருத்தம்

போற்றி! என் வாழ்முதல் ஆகிய பொருளே!
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில் நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
ஏற்றுயர் கொடியுடை யா! எனை உடையாய்!
எம்பெரு மான்! பள்ளி எழுந்தரு ளாயே! 1

அருணன்இந் திரன்றிசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்ந்திரு முகத்தின்
கடிமலர் மலரமற் றண்ணல்அங் கண்ணாம்
திரள்நிரை அறுபதம் முரல்வன இவைஓர்
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே!
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே!
அலைகட லே! பள்ளி எழுந்தரு ளாயே. 2

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை யொழிஒளி உதயத்து
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவ! நற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாய்!எமக் கெளியாய்
எம்பெரு மான்! பள்ளி எழுந்தரு ளாயே. 3

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய –பிணைமலர்க் தோத்திரம் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறை உறை சிவபெரு மானே
என்னையும் ஆட்கொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்! பள்ளி எழுந்தருளாயே. 4

பூதங்கள் தோறும்நின் றாய்எனின் அல்லால்
போன்னிலன் வரவிலன் எனைநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா!
சிந்தனைக் கும்அரியாய்! எங்கள் முன்வந்(து)
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புதியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருள்வாயே.

பப்பற வீட்டிருந் துணரும் நின் அடியார்
பந்தனை வந்தறுத் தார் அவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடந் தியல்பின்
வணங்குநின் றார் அணங் கின்மன வாளா!
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறைஉறை சிவபெருமா மானே!
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்! பள்ளி எழுந்தரு ளாயே! 6

அதுபழச் சுவையென அமுதென அறிவதற்(கு)
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுள இவன்அவன் எனவே
எங்களை ஆண்டுகொண்டு இங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு உத்தர பெருந்துறை மன்னா!
எதுஎமைப் பணிகொளும் ஆறது கேட்போம்
எம்பெரு மான்! பள்ளி எழுந்தரு ளாயே. 7

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்?
பந்தனை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்
திருப்பெருந் துறைஉறை கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தே! பள்ளி எழுந்தரு ளாயே. 8

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளே! உன தொழுப்படி யோகங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்!வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே!
கடலமு தேகரும் பே! விரும் படியார்
எண்ணகத் தாய்! உல குக்குயி ரானாய்!
எம்பெரு மான்! பள்ளி எழுந்தரு ளாயே. 9

புவனியில் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குநின் றோம்அவ மேஇந்தப் பூமி
சிவன்உய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கி
திருப்பெருந் துறைஉறை வாய்! திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும் நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
ஆரமு தே! பள்ளி எழுந்தரு ளாயே. 10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாமே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள்என் னேஎன்னே
ஈதேஎந் தோழி பரிசேலோர் எம்பாவாய்!

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போ இப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்!
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடம்ஈதோ விண்ணோர்கள் ஏத்துவதற்கு
கூசும் மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்!

முத்தன்ன வெண்ணகையாய்! முன்வந்தெதி ரெழுந்தென்
அத்தன்ஆ னந்தன் அமுதன்என்று அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ! ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொட்டால் பொல்லாதோ
எத்தோநின் அன்புடமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய் !

ஒண்ணித் திலநகையாய் ! இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ!
எண்ணிக் கொடுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின் றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்!

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ! கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய் !

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ;
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந்து எம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கு
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய் !

அன்னே ! இவையும் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவன்என்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்ஆனை என் அரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோம்கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய் !

கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய் !

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் போர்த்தும் அப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம்ஏலோர் எம்பாவய் !

பாதாளம் எழினும் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப் பிளைகாள்
ஏதவன்ஊர் ஏதவன்பேர் ஆர்உற்றார் ஆர்அயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொய்யார் தடம்பொய்கை புக்கு முக்கேர்என்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம்காண் ஆரழல்போல்
செய்யாவெண் ணீறாடி செல்வா ! சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா !
ஐயா ! நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய் !

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய் !

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய் !

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம்பலம் பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருள்ஆ மாபாடிச்
சோதி திறம்பாடி சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம்ஆ மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத்திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய் !

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீர்ஒருகால் வாய்ஓவாள் சித்தம் களிகூர
நீர்ஒருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேர் அரையர்க்கு இங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆர்ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வார்உருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏர்உருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய் !

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நம்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமா னன்பர்க்கு
முன்னி யவள்நமக்கு முக்சுரக்கும் இன்னருளை
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய் !

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளி
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடேலோர் எம்பாவாய் !

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம் அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகி
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடி
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய் !

உன்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கப் பழஞ்சொல் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எங்கொங்கை நிற்அன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன்! நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவய் !

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாஉயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள
போற்றி எல்லாஉயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய் !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஓம் ஜெய துர்க்காயை நம*

# ஸ்ரீ துர்க்காதேவி அஷ்டகம்

**(பண் : நாதநாமக்கிரியை)**

பகவதி தேவி பர்வத தேவி
பலமிகு தேவி துர்க் கையளே
ஜெகமது யாவும் ஜெயஜெய வெனவே
சங்கரியுன்னைப் பாடி டுமே
ஹநஹந தகதக பசபச வெனவே
தளிர்த் திடுஜோதி யான வளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா! 1

தண்டினி தேவி தக்ஷிணி தேவி
கட்கினி தேவி துர்க் கையளே
தந்தன தான தனதன தான
தாண்டவ நடன ஈச்வ ரியே
முண்டினி தேவி முனையொளி சூலி
முனிவர்கள் தேவி மணித் தீவி
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா! 2

காளினி நீயே காமினி நீயே
கார்த்திகை நீயே துர்க் கையளே
நீலினி நீயே நீதினி நீயே
நீர்நிதி நீயே நீர் ஒளியே
மாலினி நீயே மாதினி நீயே
மாதவி நீயே மான் விழியே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா! 3

நாரணி யாயே நான்முகன் தாயே
நாகினி யாயே துர்க் கையளே
ஊரணி யாயே ஊற்று தாயே
ஊர்த்துவ யாயே ஊர் ஒளியே
காரணி யாயே காருணி தாயே
கானக யாயே காசி னியே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா! 4

வேதமும் நீயே வேதியள் நீயே
வேகமும் நீயே துர்க் கையளே
நாதமும் நீயே நாற்றிசை நீயே !
நாணமும் நீயே நாய கியே
மாதமும் நீயே மாதவம் நீயே
மானமும் நீயே மாய வளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா! 5

கோவுறை ஜோதி கோமள ஜோதி
கோமதி ஜோதி துர்க் கையளே
நாவுறை ஜோதி நாற்றிசை ஜோதி
நாட்டிய ஜோதி நாச்சியளே
பூவுறை ஜோதி பூரண ஜோதி
பூதநற் ஜோதி பூரணையே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா! 6

ஜெய ஜெய சைல புத்திரி ப்ரஹ்ம்
சாரிணி சந்த்ர கண்டி னியே
ஜெயஜெய கூஷ் மாண்டினி ஸ்கந்த
மாதினி காத்யா யன்ய யளே
ஜெயஜெய கால ராத்திரி கௌரி
ஸித்திதா ஸ்ரீநவ துர்க் கையளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா! 7

திருமக ளானாய் கலைமக ளானாய்
மலைமக ளானாய் துர்க் கையளே
பெருநிதி யானாய் பேரறி வானாய்
பெருவலி யானாய் பெண் மையளே
நறுமல ரானாய் நல்லவ ளானாய்
நந்தினி யானாய் நங்கை யளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா! 8


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைமகள் துணை

# கலைமகள் வாழ்த்து



*ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்*
*ஏய உணர்விக்கும் என்னம்மை – தூய*
*உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே*
*இருப்பளிங்கு வாரா திடர்.*

**ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்**
*அருளிய*

## சகல கலாவல்லிமாலை

வெண்டா மரைக் கன்றி நின்பதந்
தாங்கஎன் வெள்ளை உள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொ
லோ? சகமேழு மளித்(து)
உண்டான் உறங்க ஒழித்தான்பித்
தாகஉண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே !
சகல கலாவல்லியே ! (1)

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய் பங்கயாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே !
கனதனக் குன்றும் ஐம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே !
சகல கலாவல்லியே ! (2)

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோ? உளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவல் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே !
சகல கலாவல்லியே ! (3)

தூக்கும் பனுவல் துறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்; வட நூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர்செந் நாவில்நின்று
காக்கும் கருணைக் கடலே !
சகல கலாவல்லியே ! (4)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்

பாதபங் கேருகமென்

நெஞ்சத் தடத் தல ராததென்

னே? நெடுந் தாட்கமலத்(து)

அஞ்சத்துவசம் உயர்ந்தோன்செந்

நாவும் அகமும் வெள்ளைக்

கஞ்சத் தவிசொத் திருந்தாய்

சகல கலாவல்லியே ! (5)

பண்ணும் பரதமும் கல்வியும்

தீஞ்சொற் பனுவலும்யான்

எண்ணும் பொழுதுஎளி தெய்தநல்

காய்; எழு தாமறையும்

விண்ணும் புவியும் புனலுங்

கனலும்வெங் காலும் அன்பர்

கண்ணும் கருத்தும் நிறைந்தாய்

சகல கலாவல்லியே ! (6)

பாட்டும் பொருளும் பொருளால்

பொருந்தும் பயனும் என்பால்

கூட்டும் படிநின் கடைக்கண்நல்

காய்; உளங் கொண்டுதொண்டர்

தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பால்

அமுதந் தெளிக்கும்வண்ணங்

காட்டும்வெள் ளோதிமப் பேடே !

சகல கலாவல்லியே ! (7)

சொல் விற் பனமும் அவதான

முங்கல்வி சொல்லவல்ல

நல்வித்தை யும்தந் தடிமைகொள்

வாய்; நளி னாசனஞ்சேர்

செல்விக் கரிதென் றொரு கால

முஞ்சிதை யாமைநல்கும்

கல்விப் பெருஞ்செல்வப் பேறே !

சகல கலாவல்லியே ! (8)

சொற்கும் பொருட்கும் உயிராமெய்ஞ்

ஞானத்தின் தோற்றமென்ன

நிற்கின்ற நின்னை நினைப்பவர்

யார்? நிலந் தோய்புழைக்கை

நற்குஞ் சரத்தின் பிடியோ(டு)

அரசன்னம் நாணநடை

கற்கும் பதாம்புயத் தாயே !

சகல கலாவல்லியே ! (9)

மண்கண்ட வெண்குடைக் கீழாக

மேற்பட்ட மன்னரும்என்

பண்கண் டளவிற் பணியச்செய்


வாய்; படைப் போன்முதலாம்

விண்கண்ட தெய்வம்பல் கோடிஉன்

டேனும் விளம்பில்உன்போல்

கண்கண்ட தெய்வம் உளதோ?

சகல காலவல்லியே ! (10)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்த சஷ்டி கவசம்

காப்பு
நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைப்போந் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச்செல்வம் பலித்துக் கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலரருள்
கந்தர்சஷ்டி கவசந் தனை.

குறள் வெண்பா

*அமரரிடர் தீர வமரம் புரிந்த*
*குமரனடி நெஞ்சே குறி.*

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ் செயும் மயில்வாகனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவரவேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரஹண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா நமோநம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிறைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன் றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல் பூஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்
றுன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணை வேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக லன்னில் வச்ரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி னோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைக டின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லினு மிருட்டிலும் எதிர்ப்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்தோடிட
ஆனை யடியினில் அரும்பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமு மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைத்து குலைந்திட
மாற்றான் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடிட
படியினின் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் றணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுட னிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்பும் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவருமெனக்கா
மண்ணாளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரஹண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல் வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமக ணன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினே னாடினேன் பரவச மாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியிலணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்தி பெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைக ணீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந்தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்த சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் றேவ ராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துடனாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒரு நாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாற் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணிந்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத் தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெற்றியே புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில் நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணம் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்.

*வேலும் மயிலும் துணை!*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காமப் பாடல்கள்
## அருணகிரிநாதர் அருளிய
# திருப்புகழ்

திருத்தலம் - கதிர்காமம்
சில பாடல்கள்

*தனதனன தான தனதனன தான*
*தனதன தானத் தனதானா*

திருமகளு லாவு மிருபுயமு ராரி
திருமருக நாமப் பெருமாள்காண்
செகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
தெரிதருகு மாரப் பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில்விளை யாடு
மரகதம யூரம் பெருமாள்காண்
மணிதரளம் வீசி யணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு பட அசுரர் மாள
அமரர்பொருத வீரப் பெருமாள்காண்
அரவுபிறை வாரி விரவுசடை வேணி
அமலர்குரு நாதப் பெருமாள்காண்
இருவினையி லாத தருவினைவி டாத
இமையவர்கு லேசப் பெருமாள்காண்
இலகுநிலை வேடர் கொடியினதி பார
இருதனவி நோதப் பெருமாள்காண் 1

*தனன தான தானான தனன தான தானான*
*தனன தான தானான தனதானே*

அகிலன் மாறு மாறாத கலதி, பூத வேதாளி
அடைவில்ஞாளி, கோமாளி, அறமியா
அழிவுகோளி, நாணாது புழுகுபூசி வாழ்மாதர்
அருளிலாத தோடோய மருளாகிப்
பலகலாக ரா! மேரு மலைகரா சலா! வீசு
பருவமேகமே ! தாரு! எனயாதும்
பரிவுறாத மாபாதர் வரிசைபாடி, யோயாத
பரிசில்தேடி, மாயாத படி, பாராய்
இலகுவேலை நீள்வாடை யெரிகொள்வேலை மாசூரி
லெறியும்வேலை மாறாத திறல்வீரா!
இமயமாது பாகீர திநதி பால கா! சாரா
இறைவாகான மால்வேடர் சுதைபாகா
கலகவாரி போல்மோதி வடவையாறு சூழ் சீத
கதிர்காம மூதூரி லிளையோனே!
கனகநாடு வீடாய கடவுள்யானை வாழ்வான
கருணைமேரு வே தேவர் பெருமாளே ! 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தனனதான தத்த தனதான*
*தனனதான தத்த தனதான*

எதிரிலாத பக்தி — தனைமேவி
இனியதாணி னைப்பை — யிருபோதும்
இதயவாரி திக்கு — ளுறவாகி
எனதுளேசி றக்க — அருள்வாயே !
கதிர்காம வெற்பி — லுறைவோனே !
கனகமேரு வொத்த — புயவீரா !
மதுர வாணி யுற்ற — கழலோனே
வழுது கூனி மிர்த்த — பெருமாளே ! 3

*தத்த தனதான*
*தனனதான தத்த தனதான*

கடக வருவிகள் தப வரி அதிர்கதிர்
காமத் தரங்க — மலைவீரா
கனகத நகமுலி புணரித குணகுக
காமத் தனஞ்சம் — புயனோட
வடசிக ரகிரித விடுபட நடமிடு
மாவிற் புகுங்கந் — தவழாது
வழிவழி தமரென வழிபடு கிலனெ
வாகிக் கினம்பொன் — றிடுமோதான்
அடவியி ருடியபி நவகும ரியடமை
யாயப் புனஞ்சென் — றயர்வோனே !
அமிலவ சபரிசெய் கவிபுகழ் தருகவி
யாளப் புயங்கொண் — டருள்வோனே !
இடமொரு மரகத மயிலிசை வடிவுள
ஏழைக் கிடங்கண் — டவர்வாழ்வே
இதமொழி பகரினு மதமொழி பகரினு
ஏழைக் கிரங்கும் — பெருமாளே ! 4

*தனனதன தானத்த தனனதன தானத்த*
*தனனதன தானத்த தனதான தானன*

சமருமுக வேலொத்த விழிபுரள வாரிட்ட
தனமசிய வீதிக்குள் — மயில்போலு லாவியே
சரியைக்ரியை யோகத்தின் வழிவருக்கு பாகத்தர்
தலையுணர சாதத்தின் — வசமா மேவியே
உமதடியு னாருக்கு மனமரண மாயைக்கு
முரியவர்ம காதத்தை — யெடனமாய மாதரார்
ஒளிரமளி பீடத்தி லமடுபடு வேனுக்கு
முனதருள்க்ரு பாசித்தம் — அருள்கூர வேணுமே
இமகிரிகு மாரத்தி யநுபவைப ராசத்தி
எழுதரிய காயத்ரி — உமையாள்கு மாரனே
எயினர்மட மானுக்கு மடலெழுதி மோதித்து
இதணருகு சேவிக்கு — முருகாவி சாகனே
அமரர் சிறை மீள்விக்க வமர்செய்துப்ர தாபிக்கு
:மதிகவித சாமர்த்ய — கவிராஜராஜனே
அழுதுலகை வாழ்வித்த கவுணியகு வாதித்த
அரிய கதிர்காமத்தில் — உரியாபி ராமனே 5


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தனத்தா தனத்தா தனத்தா தனத்தா தனத்தா*
*தனத்தா தனத்தா தனதான*

சரத்தே யுதித்தா யுரத்தே குதித்தே
சமர்த்தா யெதிர்த்தே வருசூரைச்
சரிப்போ னமட்டே விடுத்தா யடுத்தாய்
தகர்த்தா யுடற்றான் னிருகூறாச்
சிரத்தோ ரத்தோ டறுத்தே குவித்தாய்
செகுத்தாய் பலத்தார் விருதாகச்
சிறைச்சே வல்பெற்றாய் வலக்கா ரமுற்றாய்
திருத்தா மரைத்தா ளருள்வாயே
புரத்தார் வரத்தார் சரச்சே கரத்தார்
பொரத்தா னெகிர்த்தே வருபோது
பொறுத்தார் பரித்தார் சிரித்தா ரெரித்தார்
பொரித்தார் நுதற்பார் வையிலேயின்
கரித்தோ லுரித்தார் விரித்தார் தரித்தார்
கருத்தார் மருத்தூர் மதனாரைக்
கரிக்கோ லமிட்டார் கணுக்கா ளமுத்தே
கதிர்கா மமுற்றார் பெருமானனே 6

*தனதனா தத்தனத் தனதானா தத்தனத்*
*தனதனா தத்தனத் தனதான*

சரியையா ளர்க்குமக் கிரியையா ளர்க்குநற்
சகலயோ கர்க்குமெட் டரிதாய
சமயபே தத்தினுக் கணுகொனா, மெய்ப்பொருட்
டருபரா சத்தியிற் பரமான
துரியமே, லற்புதப் பரமஞா னத்தனிச்
சுடர்வியா பித்தநற் பதி, நீடு
துகளில்சா யுச்சியக் கதியையீ றந்தசொற்
சுகசொரூ பத்தையுற் றடைவேனோ?
பரிசை சூழ் செய்ப்பதிச் சூரியசா மர்த்யசற்
புருவவீ ரத்துவிக் ரமசூரன்
புரளவேல் தொட்டகைக் குமரமேன் மைத்திருப்
புகழையோ தற்கெனக் கருள்வானே
கரியயூ கத்திரட் பலவின்மீ திற்சளைக்
கனிகள்பீ றிப்புசித் தமராடிக்
கலிகூ தத்தினிற் பயிலுமீ முத்தினிற்
கதிர காமக்கிரிப் பெருமாளே ! 7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தானதன தத்தத்த தானதன தத்த*
*தானதன த்தத்த தனதான*

பாரவித முத்தப்ப டீரபுள கற்பொற்ப இடையாமலே
பாகளவு தித்தித்த கீதமொழி
பாகளவு தித்தித்த கீதமொழி யிற்புட்ப
பாணவிழி யிற்பொத்தி விடுமாதர்
காரணி குழற்கற்றை மேல் மகர மொப்பித்த
தாதின்முக வட்டத்தி லதிமோக
காமுகன் கப்பட்ட ஆசையைம றப்பித்த
கால்களைம றக்கைக்கும் வருமேதான்
தேரிரவி யுட்கிப்பு காமுதுபு காமுதுபு ரத்திற்றெ
சாசிரனை மாத்தித்த அரிமாயன்
சீர்மருக அத்யுக்ர யானைபடும் ரத்நத்ரி
கோணசயி லத்துக்ர கதிர்காம
வீரபுன வெற்பிற்க லாபியெயி னச்சிக்கு
மேகலையி டைக்கொத்தி னிருதாளின்
வேரிமழை யிற்பச்சை வேயிலரு ணக்கற்றை
வேல்களில் கப்பட்ட பெருமானே ! 7

*தனதனா தத்த தனதனா தத்த*
*தனதனா தத்த தனதான*

மருவறா வெற்றி மலர்தொடா விற்கை
வலிசெயா நிற்கு மதனாலும்
மதில்கள் தாவுற்ற கலைபடா வட்ட
மதிசுடா நிற்கு மதனாலும்
இருகணால் முத்த முசிரயா மத்தி
னிரவினா னித்த மெலியாதே
இடருறா மெத்த மயல்கொளா நிற்கு
மிவளைவாழ்விக்க வரவேணும்
கரிகள்சேர் வெற்பி லரியவே டிச்சி
கலவிலுர் சித்ர மணிமார்பா
ககனமா ணிக்க வடிவனே மிக்க
கதிர காமத்தி லுறைவோனே
முருகனே பக்த ரருகனே முத்தி
முதல்வனே பச்சை மயில்நீரா
முடுகிமே லிட்ட கொடியசூர் கெட்டு
முறியவே ல்தொட்ட பெருமாளே ! 9


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தானதன தானத் தனதான தானதன தானத் தனதான*

மாதர்வச மாயுற் றுழல்வாரும் மாதவமெ ணாமற் றிரிவாரும்
தீதகல வோதிப் பணியாரும் நீநரக மீதிற் றிகழ்வாரே
நாதவொளி யேநற் குணசீலா நாரியிரு வோரைப் புணர்வேலா
சோதிசிவ ஞானக் குமரேசா தோமில்கதிர் காமப் பெருமாளே

*தனன தான தான தத்த தனன தான தான தத்த*
*தனன தான தான தத்த தனதான*

முதிரு மார வார நட்பொ டிலகு மார வார மெற்றி
முனியு மார வார முற்ற கடலாலே
முடிவி லா தோர் வடக்கில் எரியு மால மார்பி டத்து
முழுகி ஏற் மேலெ றிக்கு நிலவாலே
வெதிரி லாயர் வாயில் வைத்த மதுர ராக நீடி சைக்கும்
வினைவி டாத தாய ருக்கு மழியாதே
விளையு மோக போக முற்றி அளவி லாத காதல் பெற்ற
விகட மாதை நீய ணைக்க வரவேணும்
கதிர காம மாந கர்க்கு ளெதிரி லாத வேல்த ரிக்க
கடவு ளேக லாப சித்ர மயில் வீரா
கயலு லாம்வி லோச னத்தி களப மார்ப யோத ரத்தி
ககன மேவு ளொருத்தி மணவாளா
அதிர வீசி யாடும் வெற்றி விடையி லேறு மீசர் கற்க
அரிய ஞான வாச கத்தை அருள்வோனே
அகில லோக மீது சுற்றி அசுர லோக நீறெ ழுப்பி
அமரர் லோகம் வாழ வைத்த பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்திகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதுளை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில்

## பிரதம குரு சிவஸ்ரீ சு.கைலாசநாதக் குருக்களின் ஆசிச் செய்தி

புதுளை மாநகரின்கண் அழகிய மலை வளங்கள் நிறைந்து சொரிந்து விளங்கும் பூமியில் சரஸ்வதி தேவி தனக்கென ஓர் இருப்பிடத்தைத் தாங்கி நிற்கும் பதுளை சரஸ்வதி தேசிய கல்லூரி வளாகத்தில் குடிகொண்டுள்ள எதற்கும் முதல்வராகிய ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானின் ஆலய கும்பாபிஷேகப் பெரு விழா நடைபெறுவது விஷேடத்திலும் விஷேடமாகும். யானை எப்படி சிறுவர் சிறுமியர்க்கு களிப்பூட்டுமோ அவ்வாறே யானைருபமாக அமர்ந்துள்ள விநாயகரும் இளஞ்சிறாருக்கு மகிழ்ச்சியைத் தருகின்றார். "ஓம்" என்ற ரூபத்தில் விநாயகரின் வடிவிலேயே வித்தியாரம்பத்தில் குழந்தைகளுக்கும் "ஓம்" என்று கல்வி தொடங்கப்படுகின்றது. கையில் எழுதுகோலாக கொம்பைப் பிடித்த உருவம் கல்வியின் மகத்துவத்தைக் காட்டுகின்றது. உருவம் பெரிதாயினும் கூரிய இரு கண்கள், சிறு ஊசியையும் குறிப்பாக பார்க்கும் திறமை; படித்தவற்றை மனதில் வாங்கும் ஞாபகசக்தி என்பன விநாயகரின் சிறந்த தத்துவ தோற்றங்கள். இவ்வாறு முழு முதற் கடவுளாக எங்கும் வீற்றிருந்து அருள் சுரக்கும் விநாயகரின் கும்பாபிஷேகம் கலைவாணியின் பெயர் கொண்ட இக்கல்லூரியில் நடப்பது மிகப் பொருத்தமானதும் விசேடமானதும் கூட.

இந்த நன்னாளிலே விநாயகப் பெருமானின் பாதாரவிந்தம் பணிந்து அவரின் அருள் பெற்று நாம் உய்வோமாக!

சிவஸ்ரீ சு.கைலாசநாதக் குருக்கள்

20-03-2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமகிருஷ்ண மிஷன் இலங்கைக் கிளைத் தலைவர் சுவாமி ஆத்மகனாநந்தஜி அவர்கள் வழங்கிய

## வாழ்த்துச் செய்தி

பதுளை சரஸ்வதி தேசிய கல்லூரியில் அமைந்துள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் கோயிலின் புனராவர்த்தன கும்பாபிஷேகம் சமீபத்தில் சிறப்பாக நடைபெற்று, அதன் நினைவாக விசேட மலரொன்று வெளியிடப்பட உள்ளதென அறிகின்றோம்.

நறுமணமில்லாத மலர் எவ்வளவு அழகாக இருப்பினும் அது குறைவுடையதே. எனவெ இறைவனது திருப்பாதங்களைச் சென்றடையும் தகுதியை இழந்துவிடுகின்றது.

அவ்வாறே, நற்குணங்களற்ற மனிதன் எவ்வளவு தான் கல்வி கற்றவனாக இருப்பினும், செல்வம் படைத்தவனாக இருப்பினும் இறைவனது திருவருளைப் பெறும் தகுதியை இழந்தவனாகின்றான்.

அன்பு, தியாகம், நேர்மை போன்ற நற்பண்புகளை வளர்ப்பதே சமயத்தின் நோக்கம். சமயச் சடங்குகளும், சமய விழாக்களும் இப்பண்புகளை வளர்க்க உதவவில்லையெனில் அவை வீணே. சரஸ்வதி தேசிய கல்லூரியில் அமைந்துள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தை மையமாக வைத்து நடைபெறும் சமய நிகழ்ச்சிகள் மாணவர்களை நல்வழிப்படுத்தி நற் பிரஜைகளாக்கும் என்பதில் ஐயமில்லை.

இத் தருணத்தில் அதிபர், ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் எமது நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சிறப்பு மலருக்கு எங்கள் நல்வாழ்த்துக்கள்.**

**சுவாமி ஆத்மகனாநந்தஜி அவர்கள்**

**20-03-2000**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பதில் பணிப்பாளரின்

## வாழ்த்துச் செய்தி

பதுளை, சரஸ்வதி தேசிய கல்லூரியின் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய புனராவர்த்தன கும்பாபிஷேகத்தினை முன்னிட்டு வெளியிடப்படும் மலருக்கு எனது வாழ்த்துச் செய்திகளை அளிப்பதில் மிக்க மகிழ்வடைகின்றேன்.

மலையகத்தின் மிக முக்கிய நகரங்களுள் ஒன்றான பதுளை மாநகர் சரஸ்வதி கல்லூரி மலையக மாணவர்களின் கல்வித்தேவைகளைப் பூர்த்தி செய்வதில் கடந்த அறுபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக சிறந்த பணிகளை ஆற்றி வருகின்றது.

அதுபோன்றே கல்லூரி வளவிலேயே அமைந்துள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயமும், முப்பது ஆண்டுகளாக மாணவரின் சமய உணர்வையும், ஆன்மீகத் தேவைகளையும் மேம்படுத்தும் பல பணிகளில் ஈடுபட்டு வந்துள்ளது. அறிவையும், உணர்வுகளையும் ஒரே சூழலிலிருந்து பெற்றுக்கொள்ளும் வாய்ப்பைக் கல்லூரி மாணவர்கள் கொண்டுள்ளனர்.

முப்பது ஆண்டுகளுக்குப்பின் இவ்வாலயத்துக்கு புனராவர்த்தன கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கூடியிருப்பது பெருமகிழ்ச்சி கொள்ளத்தக்க விடயமாகும். பெற்றோர், நலன்விரும்பிகள், மாணவர்களும் இணைந்து ஆலயக் கைக்காரியங்களைச் சிறப்புற நிறைவேற்றுகின்றனர்.

ஸ்ரீ சித்தி விநாயகரின் திருவருளால் பதுளை சரஸ்வதி தேசிய கல்லூரி அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

கும்பாபிஷேகம், சங்காபிஷேகக் கிரியைகள் முறையுற நிகழ இறையருள் பொலிவதாக.

சாந்தி நாவுக்கரசன்
பதில் பணிப்பாளர்

29-03-2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊவா மாகாண மேலதிகக் கல்விப்பணிப்பாளர் (தமிழ்)
## திரு. S. ஜோசெப் அவர்களின்
## ஆசிச்செய்தி

சமயம் என்பது மானிட வாழ்வை நெறிப்படுத்துவதாகவும், நற்பண்புகளை வளர்ப்பதாகவும் அமையும்போதுதான் அதன் உள்ளார்ந்த தனித்துவத்தை ஒவ்வொரு மனிதனும் உணர்ந்து கொள்ளமுடியும். பாடசாலைகளில் மாணவர்கள் மத்தியில் சமய உணர்வை வளர்ப்பதன் மூலம் அவர்களை எதிர்கால நட் பிரஜைகளாக மாற்றுவதுடன் மனித விழுமியங்களை வாழ்வில் பேணுபவர்களாக்கவும் முடியும்.

இவ்வகையில் சரஸ்வதி மத்திய கல்லூரியில் அமைந்துள்ள ஸ்ரீ சித்தி விநாயக பெருமானின் கும்பாபிஷேக விழா சிறப்புற வாழ்த்துகின்றேன்.

திரு. S. ஜோசெப்

25-03-2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி அதிபரின் ஆசிச்செய்தி

பதுளை சரஸ்வதி தேசிய கல்லூரியின் வளாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் இன்றுநடைபெறு கின்றது. எமது கல்லூரியின் வரலாற்றில் இன்றைய தினம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு நன்னாளாகும்

பதுளை வாழ் இந்துக்களின் தனித்துவத்தைப் பேணும் வகையில் இந்து வித்தியா விருத்திச் சங்கத்தினால் 1934 இல் தாபிக்கப்பட்ட பதுளை சரஸ்வதி வித்தியாசாலையின் சிரேஷ்ட பிரிவு 1963 இல் மகியங்கனை வீதியில் சரஸ்வதி மகா வித்தியாலயமாக இயங்கத் தொடங்கியது. அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப் பேற்றதிலிருந்து பதுளையின் ஏனைய அயற் பாடசாலைகளின் தமிழ் மொழி மூல மாணவர்களையும் ஒன்றிணைத்து சரஸ்வதி மகா வித்தியாலயம் தனது கல்விப் பணியினைத் தொடர்ந்தது. இவ்வித்தியாலத்தின் முதலாவது அதிபராகப் பதவி வகித்த திரு. ஏ. கே. முருகேசு அவர்களின் தலைமையின் கீழ் பதுளை வாழ் இந்துக்கள் அனைவரும் ஒன்றிணைந்து மாணவர்களின் நன்மை கருதி அவர்களது வழிபாட்டுக்கு ஆலயமொன்றினை அமைக்கத் தீர்மானித்ததன் விளைவாகவே "ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்" பாடசாலை வளாகத்தில் அமைக்கப்பட்டது. இவ்வாலயம் இன்று மீண்டும் புனராவர்த்தனம் செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

பாடசாலை வளாகத்தில் இவ்வாலயம் அமைந்திருப்பது மாணவர்களுக்கு கல்விச் சிந்தனையையும் தெய்வ நம்பிக்கையினையும் ஊட்டுவதாக அமைவது சாலவும் பொருத்தமானது. மேலும் இவ்வாலயத்தின் மூலம் பாடசாலையில் ஏற்படும் இறைசூழல் மாணவர்களின் மனதைப் பண்படுத்துவதாகவும் அமையுமென்பதில் ஐயமில்லை. ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானை நாளும் பொழுதும், மாணவர்கள் வணங்கிச் சைவ நெறியில் நின்று கற்று உயர அருள்பாலிப்பாராக.

இம்மகத்தான கைங்கரியத்தை நிறைவேற்றுவதற்கு முன்னின்றுதவிய பெருமக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுதல்களையும் தெரிவிப்பதோடு. ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானின் திருவருளால் யாவும் இனிதே நிறை வேறப் பணிந்து பிரார்த்திக்கின்றேன்.

கும்பாபிஷேகம் இனிதே நிறைவுபெறுவதாக.
"இன்பமே சூழ்க, எல்லோரும் வாழ்க"

திரு. செ. சந்திரராஜா
(ஸ்ரீலங்கா கல்வி நிர்வாக சேவை)
அதிபர், சரஸ்வதி தேசிய கல்லூரி, பதுளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதி அதிபரின் ஆசிச்செய்தி

பதுளை சரஸ்வதி தேசிய கல்லூரியின் 'ஸ்ரீ சித்தி விநாயகா்' ஆலய புனராவா்த்தன மஹா கும்பாபிஷேக மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதையிட்டு பெருமிதமடைகின்றேன். இயற்கை எழில் கொஞ்சும் ஊவா மாகாணத்தில் பதுளை மாநகரில் அமைந்துள்ள இக்கல்லூரி வளாகத்தில் இவ்வாலயம் அமைந்திருப்பது மிகவும் சிறப்பானதொன்றாகும். பல வருடங்களுக்கு முன் சைவத்தொண்டாற்றி சிறப்பாக சேவை புரிந்த அதிபரான திரு ஏ.கே.முருகேசு அவா்களின் தீராத முயற்சியின் பயனாக ஆரம்பிக்கப்பட்ட இவ்வாலயம் பல்லாயிரக்கணக்கான சைவ மக்களுக்கும், மாணவ, மாணவிகளுக்கும் அருள்பாலித்து வருகின்றது. ஆலயமொன்று சிறப்புற்று அருள்பாலிக்க வேண்டுமானால் பன்னிருவருடங்களுக்கு ஒரு முறை புனருத்தாரணம் செய்து, கும்பாபிஷேகம் செய்தல் வேண்டும். எனினும் போதிய முயற்சியும், நிதி வசதியும் இன்மையால் இவ்வாலயத்தின் திருப்பணி வேலையை நிறைவேற்ற முடியாமல் இருந்தது. எனின் தற்போதைய அதிபரின் விடாமுயற்சியாலும், சைவப் பெருமக்கள், நலன் விரும்பிகள் ஆகியோரின் பேருதவியினாலும் இவ்வாலயத்தைப் புனருத்தாரணம் செய்து மகா கும்பாபிஷேகம் நடாத்த அருள் கூடியுள்ளது. இப்பணியைத் தொடா்ந்துமேற் கொண்டு ஆலயம் பல வழிகளில் சிறப்புற உதவ வேண்டும் என சைவ அடியாா்கள் அனைவரையும் இருகரம் கூப்பி வேண்டி விடைபெறுகின்றேன்.

**மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்**

இராமகிருஸ்ணன் திருச்செல்வம்
பிரதி அதிபா்
சரஸ்வதி தேசிய கல்லூரி
பதுளை

23-03-2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரொக்கில் ஸ்ரீ காளியம்மன் தேவஸ்தானம்
## ஆசிச்செய்தி

ஊவா மாகாணத்தில் சிறந்தமுறையில் மாணவர்களுக்கு கல்விப் பணியாற்றிக் கொண்டிருக்கும் கல்லூரிகளில் பதுளை சரஸ்வதி தேசிய கல்லூரியின் பணி போற்றுதற்குரியதாகும். சிறந்த முறையில் சமயப் பாரம்பரியங்களைப் பேணிக் காக்கும். இக் கல்லூரி மாணவர் மத்தியில் ஆன்மீக சிந்தனையை வளர்ப்பதில் ஊக்கத்துடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. மாணவர்களே இன் நாட்டின்சொத்துக்கள். மாணவர் வளர்ச்சியில் சமயம் வழங்கும் கொடை மிகப்பெரிது. கல்லூரியில் அமைந்திருக்கும் ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானின் மஹா கும்பாபிஷேக நிகழ்வினையொட்டி வெளிவரும் கும்பாபிஷேக சிறப்பு மலர் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

க. ஜெயநாயகம்
தலைவர்,
ரொக்கில் ஸ்ரீ காளியம்மன் தேவஸ்தானம்,
பரிபாலன சபை.

27-03-2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதுளை கதிர்வேலாயுத சுவாமி கோவில்
## அறங்காவல் சபையினரின்
## ஆசிச்செய்தி

பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் தெய்வ நம்பிக்கை உடையவர்களாகக் கல்வியிலும் ஏனைய கருமங்களிலும் அக்கறை செலுத்தி ஆர்வத்துடன் கல்வி பயின்றால் அவர்கள் பரீட்சையில் சித்தி யடைவதுடன் வாழ்க்கையிலும் ஏற்றம் காண முடியும். பள்ளி செல்லும் மாணவர்கள் வழிப்பாடு செய்ய வசதியாகக் கல்லூரி வளவினுள் ஆலயம் அமைந்திருப்பது சிறப்புக்குரியதும் வரவேற்புக்குரியதுமாகும்.

சரஸ்வதி மத்திய கல்லூரி மாணவர்களுக்கு அருள்புரிவதற்காக எழுந்தருளியுள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் கும்பாபிஷேகம் நடை பெறுவதறிந்து மகிழ்ச்சியடைகின்றோம். அதனையொட்டி வெளியிடப்படும் கும்பாபிஷேக மலர் சிறப்புறவும் வாழ்த்துகின்றோம்.

அறங்காவல் சபையினர்

27-03-200



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரஸ்வதி தேசிய கல்லூரி
# ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயசரிதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தி விநாயகர் பாமாலை

## காப்பு

ஞான விநாயகன் ஞாலத்து நாயகன்
யானை முகனவன் பதம் போற்ற - மானுடத்தில்
கானமிசைத்தவன் கழல் போற்ற எமக்கு
தேனமுத தமிழின்பம் தா

*

சித்தி விநாயகன் சிந்திக்க வைப்பவன்
சக்தி தர வருவான் - அவன் மேல்
பக்தி கொண்டடியார் பாடிப் பணிந்திடின்
சித்தி வரும் இதை அறிவீர்

*

இத்திதியிலவன் இங்கெமக்கருளினும்
நித்தமும் அவனை சரணடைவோம்
முத்தி தருபவன் மூஷிக வாகனன்
தித்திக்கும் அருளினை அடைவோம் நாம்

*

சரஸ்வதி கல்லூரி சகலமும் பெற்றிட
கரங்கூப்பி நாம் வணங்கிடுவோம் - எங்கள்
சிரமதை சித்தி விநாயகன் தாளென
சரமென தந்து வாழ்த்திடுவோம்

*

கலைக்கோயில் கல்லூரி கண்ணியமாகிடவும்
அலையும் மனத்தை அடக்கியாண்டிடவும்
மலையென உறுதியுடன் மைந்தரும் மங்கையரும்
தலையென தொண்டாற்ற வாழ்த்திடுவோம்

*

பதுளை வாழ் மக்களும் மங்களம் பெற்றிட
துதி செய்யும் இந்துக்கள் சுகமும் பெற்றுய்ய
கதியென கஜமுகன் காலைப் பிடித்தினிது
புதியென வாழ்த்தி பணிந்திடுவோம்

*

வருக விநாயக வருகவே
அருளுக ஐயன் அருளுக
பரிவுடன் புத்தாயிரம் ஆண்டினிலே
விரிகதிர் சுடரோன் நீ வாழ்த்திடுவாய்

*

ஸ்ரீ சித்தி நாதனுக்கு மங்களமு மங்களம்
பக்தி கொண்டடியார்க்கும் மங்களம்
எத்திக்கிலுமுள்ள அன்பர்க்கும் மங்களம்
இத்தினம் எமக்கென்றும் மங்களமே மங்களம்.

*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வரலாறு

பதுளை வாழ் இந்துக்களின் தனித்துவத்தைப் பேணும் வகையில் இந்து வித்தியா விருத்திச் சங்கத்தினால் பதுளை தேவாலய வீதியில் 1934 இல் சரஸ்வதி விதியாசாலை ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலையின் சிரேஷ்டபிரிவு 1963 இல் மகியங்கனை வீதியில் (கிறகரி வீதி) சரஸ்வதி மகா வித்தியாலயமாக இயங்கத் தொடங்கியது. அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றதிலிருந்து பதுளையின் ஏனைய அயற்பாடசாலைகளின் தமிழ் மொழிமூல மாணவர்களையும் இணைத்து சரஸ்வதி மகா வித்தியாலயம் தனது கல்விப் பணியினைத் தொடர்ந்தது.

சரஸ்வதி மகா வித்தியாலயத்தின் முதலாவது அதிபராக திரு. A.K. முருகேசு அவர்கள் பதவியேற்றார். சைவமும் தமிழும் தழைத்தோங்கப் பாடுபட்ட இவர், இவ்வித்தியாலயம் எத்தனை நூற்றாண்டுகள் சென்றாலும் சைவத்தையும், தமிழையும் வளர்க்கும் நிலையமாக விளங்கவேண்டும் என்ற பெருநோக்கினைக் கொண்டிருந்தார். இதனை நிறைவேற்றும் வகையில் பல்வேறு எதிர்ப்புகளுக்கும் மத்தியில் 1965 ம் ஆண்டு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தினைப் பாடசாலை வளாகத்தில் அமைப்பித்தார். இவ்வாலயம் அமைக்கப்பட்டு 1965ம் ஆண்டு ஆனி மாதம் 30 திகதி ( 30-06-1965) புதன்கிழமை "விநாயகப் பெருமானின் திருவுருவத் தாபன விழா" பிரம்ம ஸ்ரீ ச. முத்துக் குமார சுவாமிக் குருக்களால் (யாழ்ப்பாணம், உரும்பராய், ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய பிரதமகுரு) நடாத்தி வைக்கப்பட்டது.

பின்னர் 1970ம் ஆண்டு ஆலயம் மீண்டும் புனரமைப்புச் செய்யப்பட்டு, 1970ம் ஆண்டு ஆனித்திங்கள் 22ம் நாள் (1970-06-22) கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. தொடர்ந்து ஆலயத்துக்கு குருக்கள் ஒருவர் அமர்த்தப்பட்டு நித்திய பூசைகளும் கூட்டுப் பிரார்த்தனைகளும் நடை பெற்று வந்தன.

இதன் பின்னர் பல்வேறு வசதியீனங்களும் நெருக்கடிகளும் காரணமாக ஆலயத்தின் கும்பாபிஷேகம் தொடர்ந்து நடைபெற முடியவில்லை. ஆயினும் மீண்டும் 1999 இல் இவ்வாலயத்தைப் புரனமைப்புச் செய்வதற்குத் திருவருள் பாலித்ததின் விளைவாக இன்று 2000 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 20ம் திகதி (20-03-2000) இவ்வாலயத்தின் புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் சிவஸ்ரீ கைலாசநாதக் குருக்களால் நடாத்தி வைக்கப்படுகின்றது.

அதிபர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# விநாயகர் திருவுருவத் தாபன விழா

## சரஸ்வதி மகா வித்தியாலயம்

## வதுளை

அன்புடையீர்!

நிகழும் விசுவாவசு ஸ்ரீ ஆனி மீ 16-ம் உ. (30-6-65)
புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் வரும் சுபமுகூர்த்தத்தில்
ஷ வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட ஆலயத்தில்,
விநாயகப் பெருமானின் திருவுருவத்தாபன விழா

**பிரம்ம ஸ்ரீ ச. முத்துக்குமாரசுவாமிக் குருக்கள்**
(யாழ்ப்பாணம், உரும்பராய், ஸ்ரீ கற்பக விநாயகர் ஆதீன பிரதம குரு)

அவர்களால் நடாத்தி வைக்கப்பெறும்.
இவ்விழாவில் பங்கு பற்றித் திருவருள் பெற்றுச்
சிறப்புறுமாறு அன்பர்கள் யாவரையும் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
அ. க. முருகேசு
அதிபர்

வதுளை,
28—6—65.

வளர்மதி அச்சகம், பண்டாரதரிப்பு.

எமது பாடசாலையின் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் அமைக்கப்பட்டு 30-06-1965 இல் விநாயகர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டமையைத் தெரிவிக்கும் பிரசுரத்தினை மேலே காண்க.

23-03-2000

23/3/2000
Principal



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

[illegible]

# [illegible]

## [illegible]

### சான்றிதழ்

[illegible]

பிரம்ம ஸ்ரீ ச. முத்துக்குமாரசுவாமிக் குருக்கள்

[illegible]

இப்படிக்கு

ஆ. க. முருகேசு

அதிபர்

[illegible],

28—6—63.

[illegible]

மேற்படி [illegible] 30-06-1965 இல் [illegible]

[illegible]

23-03-2000

# கட்டுரைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழுமியம் சார்ந்த வாழ்க்கைக் குறிக்கோள்

குமாரசாமி சோமசுந்தரம்

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே" என்ற கீழைத் தேயக் கவிஞனின் கருத்தும், "மனிதன் இயற்கையில் தீயவனாகப் பிறப்பதில்லை; சமூகத்தின் குறைபாடுகளே அவனைத் தீயவனாக்குகின்றன," எனும் மேலைத் தேயச் சிந்தனையாளர் ரூசோவின் கருத்தும் ஒப்பு நோக்கற்பாலது. மனிதன் பிறக்கும்போது, நல்ல மானுட இயல்புகளுடனும், சுதந்திர உணர்வுகளுடனும் தான் திகழ்கின்றான். ஆயினும் அவன் வளர்ந்து வரும் போது சமூகச் சூழலின் தாக்கத்தினால் தன் மானுட இயல்புகளை மறந்து, சுதந்திர உணர்வினை இழந்து, ஈற்றில் தன்னையே இழந்து அடிமை நிலையில் அல்லல்களுடன் வாழ்கின்றான்.

மனித வாழ்க்கையின் குறிக்கோள்கள் யாவை? குறிக்கோள் இல்லாத வாழ்க்கை, மீகாமன் இல்லாத கப்பல் ஆழ்கடலில், அலைகளின் மத்தியில், செல்லுந் திசை தெரியாமல் தத்தளிப்பது போல; எவற்றை அடைய வேண்டும் என்ற திடமான நிலைப்பாடு இல்லாததாகவே இருக்கும். வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்குக் குறிக்கோள்கள் அவசியம். இக் குறிக்கோள்கள் அடையப்படக் கூடியனவாகவும், அவ்வாறு அவற்றை அடைவதற்கு மேற்கொள்ளப்படும் வழி, பயன்படுத்தப்படுகின்ற முறைகள், உத்திகள், கருவிகள் அனைத்துமே நீதியின் அடிப்படையில், அறம் சார்ந்தனவாகவும், மனித மேம்பாட்டிற்கு இட்டுச் செல்வனவாகவும் அமைய வேண்டியது இன்றியமையாததாகும். எனவே, வாழ்க்கைக் குறிக்கோள்கள் விழுமியங்கள் சார்ந்தனவாக இருத்தல் வேண்டும். இதிலிருந்து பிறக்கும் கருத்து என்னவெனில், மனிதனாகப் பிறவியெடுத்த ஒவ்வொருவரும், வாழ்க்கைக் குறிக்கோள்களை வகுத்துக் கொள்ளுதல் அவசியம்; அவ்வாறு வகுக்கும் போது வாழ்க்கையை இப்படித்தான் வாழ வேண்டும் என்ற சீரிய நிலைப்பாட்டினை உறுதியோடு வரையறுத்துக் கொள்ளுதல் வேண்டும். அதன்படி ஒழுகுதல் வேண்டும். மனிதப் பண்புகளோடு, மனிதர்களாக வாழ்வதற்கு இதுவே சிறந்த வழி. இவ்வாறு வாழ்ந்தால், குறிக்கோள்களும் நிச்சயம் அடையப்படும், வாழ்வும் இன்பமயமாக அமையும். மாறாக, இன்று பலர் எப்படியும் வாழலாம் என்ற நிலைப்பாட்டினைக் கொண்டிருக்கின்றனர். நேர் வழி இருக்கக் குறுக்கு வழியைப் பயன்படுத்திக் கூடிய விரைவில் அதிக இலாபத்தைப் பெற முயற்சிக்கின்றனர். ஆரம்பத்தில் சிறிய இலாபங்கள் கிடைக்கப் பெற்றாலும் இறுதியில் ஏமாறப் போவது நிச்சயம். வாழ்க்கையில் தோல்வியைத் தழுவிய பின்னர், வந்த வழியைத் திரும்பிப் பார்த்துக் கவலைப்படுவதில் அர்த்தமில்லை. எனவே "வரமுன் காக்க" என்ற ஆன்றோர் வாக்குப்படி, நல்ல வாழ்க்கைக் குறிக்கோள்களை வகுத்து; தூய மனத்தினராய், தூய பேச்சினராய், தூய செயலினராய், நேர் வழியில் செல்பவராய், மானுடம் நிறைந்தவராய், அக் குறிக்கோள்களை அடைய முயன்றால் வெற்றி நிச்சயம்; வாழ்விலும் இன்பம் மலருதல் உறுதி.

பண்டைய தமிழ் மக்கள், ஒவ்வொருவரும் சான்றோனாக வாழ்க்கையில் திகழ வேண்டும் என்ற விழுமிய வாழ்க்கைக் குறிக்கோள்களை வைத்திருந்தனர்.

"சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே"

என்ற புறநானூற்று அடியும்,

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்"

எனும் திருக்குறட்பாவும், அதனை உறுதிப்படுத்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயது முதிர்ந்தும், அதற்குரிய அறிகுறிகளான நரை, திரை, தளர்வு என்பனவற்றை பிசிராந்தையார் என்ற சங்க காலப் புலவரில் கண்டு கொள்ள முடியாத நிலையில், இருப்பதைக் கண்ணுற்று, அவர் இளமையாகத் தோற்றமளிப்பதற்குரிய காரணத்தை வினவிய போது, அவர் கூறினார்: தனது குடும்பத்தில் நல்ல மனைவி, நன்மக்கள் இருப்பதாலும்; அதற்கும் மேலாகத் தான் வாழுகின்ற ஊரில் சான்றோர் பலர் வாழுகின்ற காரணத்தினாலும் தான் மூப்பு எய்தாமல், இளமைப் பொலிவுடன் விளங்குவதாக அவர் குறிப்பிட்டார். இவ்வாறு புறநானூற்றுப்பாடல் ஒன்றில் பிசிராந்தையார் தனது இளமையின் இரகசியத்தை அழகாக விளக்குகின்றார்.

உடல் நலம் பேணலுக்கு, உடலோம்புதல் அவசியம். சத்துள்ள உணவு, உடற் பயிற்சி, ஓய்வு, ஒழுங்கான பழக்கவழக்கங்கள், சுத்தம் என்பன மூலம் உடல் ஓம்பப்படுகிறது. ஆயினும் உடல் ஓம்பலுடன் மன ஓம்பலும், உடல் நலம் பேணலுக்கு அவசியமென்பதை நாம் உணர்வோம். மனநலம் குன்றும் போது உடல் நலமும் பாதிக்கப்படுகிறது. இக் கால மருத்துவர்கள் இதனை அழுத்திக் கூறுகின்றனர். மனதை அமைதிப்படுத்துவதற்கு மாத்திரைகளைக் கொடுக்கின்றார்கள். எனினும் நீடித்த மன அமைதியை மாத்திரைகள் தரமாட்டா. மன நலம் பேணுவதற்குச் செம்மையான, நிறைவான, அங்கலாய்ப்புகள் அற்ற வாழ்க்கையே தேவை. நல்ல குடும்பம், சான்றோர்கள் நிறைந்த சமுதாயச் சூழல் என்பன மன நிம்மதியான வாழ்க்கையைத் தருகின்றன; மன நலம் பேண உதவுகின்றன. மனநலம் உடல் நலத்தைச் சீராக வைத்திருக்கின்றது. சங்க காலத்துப் புலவர் பிசிராந்தையார், இக் கருத்தைத் தான் தன் பாடலில் தெளிவுபடுத்தியுள்ளார்.

அதனால் பண்டைத் தமிழர்கள் எத்துணை சிறந்த வாழ்க்கைக் குறிக்கோள்களைக் கொண்டிருந்தனர் என்பது புலனாகின்றது. ஒவ்வொருவரும் சான்றோனாக வளர்த்தெடுக்கப்படுகின்ற போது, அவர்கள் சமுதாயக் கடமைகள், பொறுப்புக்கள், உரிமைகள் எவை என்பதை இனங்கண்டு அவற்றைத் தமது வாழ்க்கையில் மேற்கொள்ளக் கூடிய திறத்தினராக விளங்குவர். மனித விழுமியங்களுக்கு மதிப்பளித்துப்பேணும் பெற்றியராகத் திகழ்வர். பகைமை, சுரண்டல், ஆதிக்கம் என்பன மறைந்து விடும். அந்நிலையில் சுயநலம் அகன்று பிறர் நலம் பேணுதல் மேலோங்குகின்றது. நான், எனது என்ற அகங்கார, மமகார உணர்வுகளுக்குப் பதிலாக நாங்கள், எமது என்ற பொது நல உணர்வு தோன்றுகின்றது. இவையே ஒரு சமுதாயத்திற்குச் சிறந்த அரண், பாதுகாப்பு என்று நம் முன்னோர்கள் கொண்டமை எத்துணை விவேகமான செயற்பாடு. மக்கள், சான்றோர்கள் ஆகும்போது, வேறு பாதுகாப்புச் சேவையும் தேவைப்படாது; பாதுகாப்புச் செலவினங்களும் ஏற்படாது. ஒரு நாட்டிற்குச் சிறந்த பாதுகாப்பு மக்களின் சான்றாண்மையே. மக்கள், மனித விழுமியங்களை வளர்த்துக் கொள்ளச் செய்வதன் மூலமே அவர்களைச் சான்றோர்களாகப் பரிணமிக்கச் செய்ய முடியும். வளர்ந்தவர்கள், விழுமியங்களை அனுசரித்து வாழ்ந்து காட்டுவதன் மூலமும், மனித விழுமியங்கள் சார்ந்த கல்வியை வழங்குவதன் மூலமுமே இளைய தலைமுறையினரை சான்றோர்களாக வளர்ச்சி பெறச் செய்யலாம். குடும்பம், சமூகம், பாடசாலை, வழிபாட்டிடங்கள் ஆகியன குழந்தைகளைச் சான்றோர்களாக வளர்த்தெடுப்பதில் ஆர்வமும் சிரத்தையுங் கொள்ள வேண்டும்.

மனம், சொல், செயல் ஆகியவற்றில் தூய்மையைப் பேணுபவர்கள் சான்றோர். பிறருக்கு நன்மைதரும் நல்ல எண்ணங்களையே மனதில் தோற்றுவித்து; எல்லோருக்கும் இன்பம் தரும் இனிய, பண்பான சொற்களையே பேசி; நல்ல விளைவுகளை ஏற்படுத்தும் நற் பணிகளிலும், நற் செயல்களிலுமே ஈடுபாடு கொண்டு விளங்குபவர்கள் சான்றோர்கள். உள்ளத்தில் உண்மையொளி உண்டாகில், வாக்கினிலே ஒளி உண்டாகும் என்கிறார் மகாகவி பராதியார். உள்ளத்திலும், வாக்கிலும் ஒளியுண்டானால், ஆற்றப்படும் கருமங்களும், பணிகளும் ஒளி பொருந்தியனவாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

சான்றோர்கள் ஐந்து சார்புகளைக் கொண்டவர்கள் எனப் பின்வரும் திருக்குறள் கூறுகின்றது.

"அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்து சால்பு ஊன்றிய தூண்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் ஐந்து பண்புகளும், சால்பு என்பதைத் தாங்குகின்ற உறுதியான தூண்களாகும். சால்பு என்பது பிறருடைய தீமையை எடுத்துச் சொல்லாததும், பிறருக்குத் தீங்கு எண்ணாததும், விளைவிக்காததுமான இனிய நற்பண்பு. இன்னாசெய்தார்க்கும் இனியவை செய்தல்; ஆற்றல் மிகுந்திருந்தும் பணிதல்; ஊழிக்காலம் வந்து உலகம் புடைபெயர்ந்தாலும், சான்றாண்மையிலிருந்தும் விலகாதிருத்தல் என்பன சான்றோரின் சால்புக்கு உரைகல் போல மதிப்பிடும் கருவிகளாக உள்ளன.

சான்றோர்களே உயர்ந்தவர்கள். உலகம் என்பது உயர்ந்தோர் மேற்று என்பர். எனவே நம் முன்னோர்கள் உலகம் என்று குறிப்பிட்டது, சான்றோர்களைக் கொண்ட உலகத்தையே. சான்றோர்கள் இல்லாத உலகத்தை அவர்களால் கற்பனைச் செய்தும் பார்க்க முடியவில்லை. சான்றோர் இல்லாத ஊர், ஊரல்ல, அது அடவிக்காடே என்றனர். மனிதர்கள் வாழத் தகுந்த இடமல்ல.

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்."

எனும் குறட்பாவில் உலகம் என்று குறிப்பிடப்படுவது உயர்ந்தவர்களாகிய சான்றோர் உலகத்தையே. ஆகவே, சான்றோர்களோடு பொருந்தி ஒழுகுகின்ற வாழ்க்கை முறையை அறிந்து கொள்ளாதவர் பல நூல்களைக் கற்றவராக இருந்த போதிலும், கல்லாதவராக, அறிவில்லாதவராகவே கணிக்கப்படுவர். எனவே, ஒவ்வொருவரும் சான்றோராக வர முயல வேண்டும் என்பதே இதன் தாற்பரியம். வெறும் நூற்கல்வி மட்டும் ஒருவனை சான்றோனாக்கி விட முடியாது. ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது. நல்ல மனித பண்புகளைப் பெற்று, ஒழுகும் போதுதான் சான்றோன் நிலையை அடைய முடிகின்றது.

"உள்ளத்து நேர்மை, உலகத்து உடன்பாட்டிற்காக தியாகம் செய்யப்படலாகாது."

என்கிறார் கிரேக்கத்துப் பேரறிஞர் பிளேற்றோ. 'உலகம்' என்று பிளேற்றோ குறிப்பிடுவது சாதாரண மக்கள் வாழும் உலகத்தை. வள்ளுவர் கூறும் உலகம், சான்றோர் உலகம். எனவே இந்த இரு வேறு உலகத்தையும் வேறுபடுத்தி உணர்ந்து கொள்ள வேண்டும். நற்பண்புகளும், நல்லொழுக்கங்களுமே சான்றோர் நிலைக்கு இட்டுச் செல்கின்றன.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"

ஒழுக்கம் உயர்வைத் தருகின்றது. அந்த ஒழுக்கம் ஒருவருக்கு உயிரைவிடப் பெறுமதி வாய்ந்தது. ஒழுக்கப் பண்புகள் விலை மதிப்பற்ற விழுமியங்கள். எனவே விழுமியங்கள் மனித உயிரைவிடச் சிறந்ததாகப் போற்றப்பட வேண்டியவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரியைகள் நிறைந்த கும்பாபிஷேகம்

பன்மொழிப் புலவர் க.சி. குலரத்தினம்

பிறவிப் பயன்

"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்'' என்பது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் அருமைத் திருவாக்கு. இது சைவாகமங்களின் சாரமாயுள்ள ஒரு வாசகம். சைவாகமங்கள் சைவசமயத்தவர்க்குரிய வாழ்க்கை, வழிபாட்டு முறைகளைக் கூறுவன. அவை சைவப்பண்பாட்டின் பண்டாரம்.

சிவபெருமான் தம்மைத் தாபித்து வழிபட்டு உய்தி பெறுவதற்கே நமக்குத் தனுகரண புவனபோகங்களைத் தந்தருளினர். எங்கும் நிறைந்துள்ள இறைவனை எல்லோருங் கூடி ஓரிடத்தே நின்று வழிபடுவதற்கு வாய்ப்பானது ஆலயம். ஆலயம், கோயில், கோட்டம், நகரம், முதலியன இறைவனிருப்பிடங்களுக்கு வழங்கும் பெயர்கள் ஆலயம் தலக்கோயில், மலைகோயில், குடக்கோயில் என மூவகைப்படும் என்பர்.

தமிழர் வாழ்வில் சைவம் மலர்ந்த காலத்தில் உலகெங்கும் ஆயிரக்கணக்கான ஆலயங்கள் எழுந்தன. இன்றைய உலகில் ஐம்பெரும் கண்டங்களாக வகுக்கப்பட்ட பெருநிலப்பரப்பெங்கும் மிகப் பழைய காலத்தில் ஆலயங்கள் நிலவின. தென்னமெரிககாவில் பழைய சைவாலயங்கள் மண்மூடுண்டு கிடக்கின்றன. தென்கிழக்காசிய நாடுகளில் பல்வேறிடங்களில் பாரிய அளவில் சைவாலயங்கள் பழுதுபட்டுக் கிடக்கின்றன. ஆபிரிக்காக் கண்டம், மத்திய கிழக்கு நாடுகள் எங்கும் சைவாலயங்கள் பல மறைந்து கிடக்கின்றன. பாரத தேசத்தின் பாகிஸ்தான் பகுதியின் வடபால் பஞ்சாப் மாநிலத்தில் பழைய சிவாலயங்கள் மண்மூடுண்டு கிடக்கின்றன. இவை 5000 ஆண்டு பழைமை வாய்ந்தவை.

ஆன்மா லயப்படும் இடமாதலால் ஆலயம் எனப் பெயர் பெற்ற கோயில் வழிபாடு, இன்றியமையாதது. பெரும்பயன் தருவது. எனவே பழந்தமிழர் கோயிலமைந்த இடங்களிலேயே குடியேறினர். கோயிலில்லா இடங்களில் கோயில் அமைத்தனர். ஆலயந்தொழுவது சாலவுநன்று என்னும் கோட்பாட்டைக் கொண்டொழுகினர். நாற்பெரும் படைகள் புடைசூழ, ஊர்வலம் சென்ற முடியுடை மன்னர்களும் கோயில் வலம் வந்து வணங்கிச் சென்றனர். முற்றுந் துறந்த முனிவர்களும் ஞானவொடுக்கம் பெறக் கோயில்களுக்கருகில் குடிகளிலுறைந்தனர். ஆலயங்கள் தோறும் சித்தர்கள் சமாதிகள் அமைந்தமையும் இவ்வாறே. இறைவன் ஆலயங்களில் உறையத் தொடங்கிய நாள் எந்நாளோ என்று நாயன்மார் இறைவனையே கேட்டுப் பாடியுள்ளார்கள். எனவே ஆலய வழிபாடு ஆரம்பித்த நாள் எவருக்கும் தெரியாது. அது ஆதி நாள். வழிபாடு வாழ்வளிக்கிறது. வாழ்வளிக்கும் வழிபாடு முத்தியின்பம் நல்குகிறது. முத்தி பெறுவதற்குப் பக்திநெறியறிவிப்பது ஆலயம்.

ஆலய அமைப்பு

ஆலய அமைப்பு, மூர்த்திகள் திருவுருவங்கள் அவற்றின் பிரதிட்டை, அவற்றுக்கான கும்பாபிஷேகம், உற்சவங்கள், பிராயச்சித்தம் முதலியன யாவும் சைவாகமங்களில் விரிவாகவுள்ளன. ஆகம வழியில் நாம் ஒழுகினால் இறைவன் நமக்கு அண்மையில் வருகிறான் என்று மாணிக்கவாசக சுவாமிகள் அருளியுள்ளார். ஆலயம் பெரிய அண்டத்தின் பிரதி அமைப்பு. அது எங்கள் உடம்பின் அமைப்புமாகும். ஆலயம் கர்ப்பக்கிரகத்தை மூலத்தானமாகக் கொண்டு, மூலவரைப் பிரதிட்டை செய்து, அவருக்குப் பரிவார தெய்வங்களைச் சுற்றுப் பிரகாரங்களிற் பிரதிட்டை செய்து, அர்த்த மண்டபம், மகா மண்டபம் ஆகிய அமைப்புக்களில் அமைய வேண்டிய நந்தி, பலிபீடம், கொடிமரம் முதலியன அமைத்து, அப்பால் தேவசபை, வசந்த மண்டபம், யாகசாலை முதலியன அமைத்துக் கோபுரவாசலின் மேலே தூலலிங்கம் தூரத்திலே கண்ட வணங்கத்தக்கதாக வானளாவிய கோபுரம் எழு மதில்கள் அமைத்து, அப்பால் பெருவீதிகள், தீர்த்தக் குளங்கள், நந்தவனங்கள், மசு மடங்கள், திருத்தொண்டர் உண்டுறங்கும் அம்பலங்கள் யாவும் அமைப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனத் தூரத்திலே கண்டு வணங்கத்தக்கதாக வானளாவிய கோபுரம் எழுப்பி நாற்பெருமதில்கள், அப்பால் தெருவீதிகள், தீர்த்தக்குளங்கள், நந்தவனங்கள், பசுமடங்கள், திருத்தொண்டர் உண்டுறங்கும் அம்பலங்கள் யாவும் அமைப்பர்

ஆலயம் அழைக்கிறது

நாம் சைவ நன்னெறியிலே நடப்பதற்கு நம்மை அழைத்து அருள் சுரப்பது ஆலயம். ஆலயம்தானும் அரனெனத் தொழுமே என்பது சைவசித்தாந்தத்தின் முடிந்த முடிபு. திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனி தன்னைச் சிவனெனவே நினைந் தவர்க்குச் சிவன் உறைவன் ஆங்கே. திருக்கோயில் பக்தி நிலையம், திருவருளான மூலபண்டாரம் வழங்கும் பத்தாயம். அது பண்பாட்டு நிலையம்.

ஆலயத்திக்கு அருள் சுரக்கும் சாத்தியம் அளிப்பது கும்பாபிஷேகம். கும்பாபிஷேகத்தைக் குடமுழுக்கு என்று தமிழில் வழங்குவர். கும்பாபிஷேகம் செய்யப்பெற்ற திருக்கோயில் மக்களுக்குப், பெருவாழ்வளிக்கும் அருள்தேக்கம். மின்சாரத்தேக்கம், நீர்த்தேக்கம் போலத் திருக்கோயிலும் ஒரு தேக்கம்

ஆன்மா திருக்கோயிலில் லயிக்கின்றமையால் அதை ஆலயம் என்பர். ஆலயம் ஒரு பசு, அதன்படி கருப்பக்கிருகம், பசுவின் மடி பால் சுரத்தல் போல் கருப்பகிருகம் திருவருள் சுரக்கிறது. பால் உடலுக்கு ஆதாரமானாற்போல் திருவருள் உயிருக்கும் ஆதாரம். இந்த ஆதாரம் இம்மைக்யேன்றி மறுமைக்கும் பயன் தருமானால், அருளில்லாதவர்க்கு அவ்வுலகம் இல்லை என்பர்.

கருபக்கிருகமாகிய மடியில் முலைக்காம்புபோல உள்ளது மூலமூர்த்தி. மூலமூர்த்தியை பிரதிட்டை செய்யும்போது மூலமூர்த்தி முழுமூச்சளிப்பது கும்பாபிஷேகம். மூலத்தானம் ஒரு ஞானவாபி. அதில் திருவருள் வெள்ளம் தேங்கி நிற்கும். அதைச் செழுநீர்த்திரள் என்று தேவாரம் போற்றுகின்றது திருக்கோயில் திருவருள் சுரக்கிறது. மூலபண்டாரம் வழங்குவதற்குத் திருக்கோயில் அழைக்கிறது. வாருங்கள் வாருங்கள் என்று மணியோசை கேட்கிறது.

யத்திரஸ்தாபனம்

ஆலயத்தில் எவர் கண்ணுக்கும் புலப்படாமல், ஆதீமூலத்தில் மூலமூர்த்தியின் பீடத்தின்கீழ் வைக்கப்பெற்றிருக்கும் ஒரு தகடு யந்திரம் ஆகும். அது பொன், வெள்ளி, செம்பு ஆகிய ஒரு உலேகத்தால் செய்யப்பெற்று, கோடுகள் வரையப்பெற்று மந்திர அட்சரங்கள் எழுதப்பெற்று, புனிதமாக்கப்பெற்று, மந்திரவுருவேற்றப் பெற்றுப் பீடத்தில் மறைத்து வைக்கப் பெற்று மருந்து சாத்தப் பெறுவதாகும். இயந்திரத்தின் மேல் பிம்பம் தாபித்தலும், அது ஆடாமல் அசையால் இருப்பதற்காக அஷ்டபந்தனம் என்னும் மருந்து சாத்துதலும், மந்திரங்கள் ஒலித்தலும், பலவிததீர்த்தங்களால் அபிடேகஞ் செய்தலும் விதிகளாகும்

கும்பாபிடேகம்

இறைவனை ஆலயத்தில் எழுந்தருளச் செய்து அவைர அன்புடன் ஆராதனை செய்து, அருள்பாலித்தருளும் வண்ணம் நாம் வணங்குவதற்கு அவசியமான, ஆதாரமான, இயல்பான, ஈடுபடுத்துவனவாய், உடன்பாடான, ஊக்கமுள்ள, எடுப்பான, ஏதுவான, ஐயமில்லாத, ஒப்புரவான கிரியா கருமங்கள் உள்ளன. அவற்றுள் கும்பாபிஷேகம் என்னும் குடமுழுக்கும் ஒன்றாகும். ஆலயத்துக்கெனத் திரட்டப்பெற்ற பொருளில் மூன்றில் ஒரு பாகம் கும்பாபிஷேகத்தின் பொருட்டு செலவிடல் வேண்டும் என்பது பொதுவிதி.

கும்பாபிஷேகம் என்பது குடத்தில் உள்ள புனித நீரைக் கொண்டு இறைவனை நீராட்டுதல் என்பது பொருள். சாதாரணமாக அவ்வாறே அபிடேகம் செய்வதும் வழக்கமும் விதியுமாகும். ஆனால் கும்பாபிஷேகம் என்னும் அபிடேகம் சிறப்பாக மத்திர பூர்வமாகப் பெருமளவில் கிரியைகள் மலியச் செய்வதென்றாகும்.

கும்பாபிடேகம் ஆவர்த்தம், புனராவர்த்தம், அனாவர்த்தம், அந்தரிதம் என நால்வகைப் பிரதிஷ்டைகளின்போது நடைபெறும் பெருங்கிரியையாகும். ஆவர்த்தம் என்பது புதிதாக நிர்மாணிக்கப் பெற்ற திருக்கோயில் செய்வதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனராவர்த்தம் என்பது பழுதுபட்டு சீர்குலைந்த ஆலயத்தைப் பழுது திருத்திப் புதுக்கியமைத்துப் பலபாகங்களையும் அழகுபடுத்திய வேளையில் செய்வதாகும். இது செய்யும் வேளையிலே தான் ஆலயததின் மூலமூர்த்தி முதலான தெய்வத் திருவுருவங்கள் பாலஸ்தாபனஞ் செய்து நாளாந்த பூசைகளைச் செய்கிறார்கள். அனாவர்த்தம் எனபது திருக்கோயிலில் ஏதாவது தாறுமாறுப் பிறழ்வாக நடைபெற்றால் அங்குற்றங்கள் நீக்குவதற்குப் பிராயச்சித்த பூர்வமாக செய்யப் பெறுவது. அந்தரிதம் என்பது திருமேனிகளான பிம்பங்களில் ஏதாவது பிளவுகள், வெடிப்புகள் குறைவுகள் உண்டாதல், ஆலயத்திரவியங்கள், களவுபோய்க் குறைவுகள் உண்டாதல் முதலிய வேளைகளில் குறை நீக்கிச் செய்வதாகும்.

இவ்வாறாக ஆவர்த்தம், பனராவர்த்தம் என்னும் இரண்டு வேளைகளிலும் செய்யும் கும்பாபிஷேகம் பெருமளவில் எவ்விதலோகமும் இன்றிச் செய்வதாகும். புனராவர்த்தம் பன்னிரண்டு ஆண்டுகளுக் கொரு முறைசெய்தல் உத்தமோத்தமம். இத்தகைய கும்பாபிஷேகப் பெருவிழாவைக் கண்கொண்டு பார்த்தல் பிறவியெடுத்ததன் பெரும்பேறு என்பர்.

கும்பம்

சாதாரணமாகச் சைவச்சடங்குகள் சமஸ்காரங்கள் நடைபெறும்.போதெல்லாம் நடுநாயகமாக நிறை குடம் வைக்கும் வழக்கத்தில் கும்பம் இடம் பெறுகிறது. புரட்டாதி மாதத்தில் நடைபெறும் நவராத்திரி விழாவுக்குக் கும்பபூசை என்றே பெயர். திருக்கோயில் கொடியேறித் திருவிழா நடைபெறும்போது யாகசாலையில் கும்பம் இடம்பெறுகிறது. கும்பம் வைப்பதற்கு தங்கம், வெள்ளி, தாமிரம் முதலிய உலோகங்கள் பயன் தருகின்றன. இவற்றுள் தாமிரமே பெருவழக்கில் உள்ளது. தாமிரம் மின்சாரத்தை ஈர்ப்பதுபோல, மந்திரவொலியையும் ஈர்க்கும் தன்மை வாய்ந்தது

செப்புக்குடத்தில் உள்ள நீர், யாகசாலையில் வேத மந்திரங்கள் ஓதும் ஒலியை ஈர்த்து, ஓசை ஒலியெலாமான இறைவனை மூலத்தானத்து மூர்த்தியின் லயிக்கச் செய்கிறது. மந்திரவொலி பாய்ச்சப்பெற்ற மூலமூர்த்தி, சாந்நித்தம் பெற்று அருள் சுரக்கிறது. அதற்கு ஆதாரமாக அடிப்பாகத்திலே தங்கத் தகடு அல்லது வெள்ளி, தாம்பரத்தகடு யந்திரம் பாய்ச்சப்பெற்று வைக்கப்பெறுகிறது. அது ஒரு பரம இரகசியம்.

குடும்பத்தில் வருணபகவான், கண்கண்ட தெய்வ நதிகளான கங்கை முதலிய நீர்களில் நிரம்புகிறார். கங்கை நீர் கிடையாவிட்டால் எந்த நீரையும் பாவனையால் கங்கையாக்கிக் கொள்வது சம்பிரதாயமும் சடங்குமாகும். சாதாரணமாகத் தீபாவளி நாளில் நீராடுதல் கங்கா ஸ்நானமாகும்.

கும்பலட்சணம்

கும்பலட்சணம் கூறுங்கால் அதிலே போர்த்த புடைவை தோலாகவும், கும்பம் சிவப்பேறப் பூசிய மண் இரத்தமாகவும், குடத்துமண் மாமிசமாகவும், கும்பத்து நீர் மேதஸாகவும், தர்ப்பையினாற் செய்த கூர்ச்சம் எலும்பாகவும், நன்றாக நாற்புறமும் சுற்றிய நூல் நரம்பாகவும், கும்பத்துள் இடம்பெற்ற இரத்தின பொன் பூ சுக்கிலமாகவும், நியசிக்கப்பெற்ற மந்திரம் உயிராகவும், கீழே பரப்பிய நெல், அரிசி, எள், பயறு, உளுந்து, துவரை, கோதுமை என்பன ஆசனமாகவும் கொள்ளப்பெறும். இஃது பாவனையின் உச்சம், பயனளிப்பதிலும் உச்சம், பக்தி வயப்படுத்துதலிலும் உச்சம். எனவேதான் இவ்வித கிரியா கிரமகாலங்களில் மக்கள் ஆயிரவராக ஆலயத்தை மொய்க்கின்றார்கள். இது சைவப்பண்பாட்டின் உச்சம்.

கும்பாபிஷேக கிரியை

ஆலயத்தை எவ்வாறமைத்தல், அதிலே மூர்த்தியை எவ்வாறு பிரதிட்டை செய்தல் என்பனவாகிய கிரியைகளைக் கூறும் ஆகமம், கும்பாபிஷேகத்துக்குச் சிறப்பிடம் கொடுத்துள்ளது. கும்பாபிஷேகம் கிரமமாகச் செய்யும் நெறியில் ஆசாரியவரணம், விப்ரானுக்ஞை தேவானுக்ஞை, வின்னே ஸ்பூஜ நம், வாஸ்துசாந்தி, ரட்சோக்ன ஹோமம், பிரவேசபலி, தேனுவாசம் என்னும் கோபூசை, புண்ணியாகவாசனம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விப்ரயோஜனம், நவக்கிரகமகம், ஸம்ஸிதா ஹோமம், காஷ்டா ஹோமம், சாந்தி ஹோமம் மூர்த்தி ஹோமம், மிருத்ஸங்கிரஹம், அங்குரார்ப்பணம், ஆசார்யரட்சாபந் தனம், பிரஸன்ன பூஜை, யாக அலங்காரம், கும்பாலங்காரம், கலாகர்ஷணம், யாத்ராஹோமம், யாத்திரா தானம், கடம், உலா, யாகசாலைப் பிரவேசம், யாகபூசை ஹோமம், யந்திரஸ்தாபனம், இரத்தினநியாஸம், பிம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம், பிம்பசுத்தி, ரட்சாபந்தனம், தத்துவதிரயோசனம், யாஹாவஸாநகம், யாத்திராதானம், கிரஹப்பிரத்தானம், கும்பஉத்தாபனம், கும்பலிங்கசம்யொஜனம், மஹாகும்பாபிஷேகம், சாங்கோபாங்க பூசை, மஹாபிஷேகம், திருக்கல்யாண உற்சவம், திருவீதியுலா, ஆசார்ய உற்சவம், எஜமான உற்சவம், அவபிரதஸ்நானம், ரட்சாவிஸர்ஜனம், மண்டலாபிடேகம் பூசை, சகஸ்ரங்காபிடேகம், சண்டயாகம் என்பனவாம். இவற்றில் குற்றங்குறைகள் இன்றிச் செய்தல் நாட்டின் சுபீட்சத்துக்கு ஏதுவாகும், பிழைகள் உண்டானால் பீடை உண்டாகும். பீடை உண்டாகாதிருப்பதற்காக மூலமந்திரத்தாலும் அஸ்திமந்திரங்களாலும் ஹோமம் செய்து நிறைவு செய்தல் பூரணாகுதியாகும்.

## கும்பத்தை எழுந்தருளச் செய்தல்

யாகசாலையில் உருவேற்றப் பெற்ற கும்பங்களை மூர்த்திகளுக்கு அபிடேகிப்பதற்கு எடுத்துச் செல்லும் காட்சி அற்புதமானது, பக்திமயமானது, கண்ணீர் மல்கச் செய்வது, பல்லியங்கள் ஒலிப்ப, வேதமந்திரங்கள் ஒலிப்ப, திருமுறைகள் ஒலிப்ப, பக்தர்களின் பஜனை கோஷங்கள் ஒலிப்ப அடியார்கள் மலர்மாரி பொழிய, இராஜகெம்பீரத்தோடு கொடி, குடை, ஆலவட்டம், சாமரையாகிய உபசாரங்கள் மலிய சிவப்பிராமணர் சிரசின் மேல் பயபக்தியுடன் கும்பங்களை சுமந்து செல்வதைப் பார்ப்பது ஒரு பேறு

## மகாகும்பாபிஷேகம்

நல்ல நேரம் முகூர்த்தம் பார்த்துக் குடத்து நீரை மூலமூர்த்தி, பரிவார மூர்த்திகள், விமானத்துக்கலசம் முதலிய இடங்களில் அபிடேகம் செய்வதைக் கண்ணாற் காணும் பேறு மனிதப் பிறப்பெடுத்த பயனாகும்.

## எஜமானர் அபிஷேகம்

கும்பாபிஷேகத்துக்குப் பெரும்பொருள் செலவிட்டு முன்னின்று சங்கற்பஞ் செய்து கிரியையாதியன செய்தவர் எஜமான் என வழங்கப் பெறுதலோடு; நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் ஆகிய ஐம்பெரும் பூதங்களோடும்; சூரியன், சந்திரன் ஆகிய சுடர்களோடும் சேர்ந்து எட்டாம் இடத்தில் எண்ணப்பெற்று நிலவும் பேறுபெற்றவருமாவர். இறைவனுறையும் இயமானன் அவர் எனவே அவருக்கும் அபிடேகம் செய்யப் பெறுகிறது.

- மறுபிரதி

> திட்டமிட்டது போதும். கூடிப் பேசியதும் போதும்.
> அனைத்துக்கும் சுருக்கமான பதில், செய்து முடிப்பதுதான்
> எந்தக் காரியமாக இருந்தாலும் அதை உடனே
> செய்து முடியுங்கள்
>
> இங்கிலாந்துப் பழமொழி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாண்டக வேந்தர் நாவுக்கரசரின் மெய்ஞான அனுபவங்கள்

ஆ.சிவநேசச் செல்வன்
பிரதம ஆசிரியர்
தினக்குரல்

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற உணர்வுடன் எண்பத்தொரு ஆண்டுகள் வாழ்ந்து திருவுடைப் பெரியாராகத் திகழ்ந்தவர் திருநாவுக்கரசு சுவாமிகள். "கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்" எனச் சேக்கிழார் பெருமான் முதன்மைப் படுத்திய அடியார் வரிசையிலே தேவார முதலிகளாகச் சிறப்பிக்கப் பெற்ற மூவரில் வயதாலும், தத்துவச் செழுமையினாலும் மெய்ஞ்ஞான அனுபவத்தாலும் நிறை செம்மையுடையவராக விளங்கிய திருநாவுக்கரசர் துன்பம் வந்துள்ளபோது துளங்காத இதயம் கொண்டவராக விளங்கிய திருஞானச் செல்வராவார்.

பன்னிரு திருமுறைகளிலே திருநாவுக்கரசு சுவாமிகள் பாடிய தேவாரத் திருப்பதிகங்கள் நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகளாகத் தொகுக்கப்பெற்றுள்ளன. சுவாமிகள் பாடியருளியவை மொத்தமாக நாலாயிரத்துத் தொள்ளாயிரம் பதிகங்கள் எனத் தெரிய வருகின்றது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது திருநின்றியூர் திருப்பதிகத்திலே, "இணைகொள் ஏழெழு நூற்றிரும் பனுவல் ஈன்றவன் திருநாவினுக் கரையன்" எனக் குறிப்பிட்டுள்ளார். நம்பியாண்டார் நம்பி திருநாவுக்கரசர் திருவேத்சமாலை என்ற நூலிலே, "பதிக மேழெழு நூறு பகருமா கவியோகி பரசு நாவரசான பரம காரண வீசன்" என கூறியுள்ளார். இதே தொகையையே சேக்கிழார் பெருமானும், "அரசு என்றும் உலகிடர் நீங்கப்பாடிய ஏழெழு நூறும்" எனப் பெரியபுராணத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கால வெள்ளத்தில் அழிந்தவை போக இப்பொழுது கிடைப்பவை முன்னூற்றிப் பதின்மூன்று பதிகங்களாகும். நான்காம் திருமுறையிலே 114 பதிகங்களும் ஐந்தாம் திருமுறையிலே 100 பதிகங்களும் ஆறாம் திருமுறையிலே 99 திருத்தாண்டகங்களும் உள்ளன. நான்காம் திருமுறையிலே உள்ள பதிகங்கள் அனைத்தும் பண்ணமை பதிகங்களாகும். அடுத்து ஐந்தாம் திருமுறையிலே உள்ளவை திருக்குறுந் தொகைப் பதிகங்களாகும். ஆறாம் திருமுறையிலே அமைந்த பாடல்கள் அனைத்தும் திருத்தாண்டகங்களாகும்.

ஆறாம் திருமுறையிலே உள்ள 99 பதிகங்களில் எல்லாமாகத் 981 பாடல்கள் காணப்படுகின்றன. "அரியானை அந்தணர்தம் சிந்தையானை" எனத் தொடங்கும் கோயில் பெரிய திருத்தாண்டகம் முதலாக, "எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ" எனத் தொடங்கும் திருப்புகலூர் திருத்தாண்டகம் ஈறாக உள்ள பாடல்களில் அறுபத்திநான்கு தலங்களைப் பற்றிய பாடல்கள் உள்ளன. திருவாரூர் திருத்தலத்திற்கு பதினொரு பாடல்களும், திருவதிகைக்கு ஐந்தும் திருவீழிமிழலைக்கு நான்கும், திருக்கயிலாயத் திற்கு மூன்றும் பாடப்பட்டுள்ளன. இவற்றிலே இரண்டு பதிகங்கள் பாடப்பெற்ற தலங்கள் எட்டாகும். குறிப்பாகச் ஷேத்திரக் கோவை, அடைவு திருத்தாண்டகம் ஆகிய இரண்டும் பலதலங்களைச் சார்ந்தனவாக உள்ளன. எந்தத் தலத்தைப் பற்றியுமில்லாது பொது வகையாக அமைந்த தாண்டகங்கள் ஆறு இத்திரு முறையிலே அமைந்துள்ளன.

திருத்தாண்டகம் என்பது யாப்பினால் பெற்ற பெயராகும். தமிழ்ச் செய்யுள் வகையாகிய தாண்டகம் என்னும் யாப்புக்கு மூல இலக்கியமாக விளங்குவது திருநாவுக்கரசு சுவாமிகள் பாடிய திருத்தாண்டகப் பாடல்களாகும். இவ்வகைப் பாடல்களை முதன் முதலாகப் பாடிப் புதிய மரபினைத் தோற்றுவித்தமையின் காரணமாக "தாண்டக வேந்தர்" எனவும் "தாண்டகச் சதுரர்" எனவும் பிற்காலத்தில் சிறப்பிக்கப்பட்டார்

தாண்டகத்தின் யாப்பமைதி இறைவனின் எண்ணிறந்த அருட்குணங்கள் எல்லாவற்றையும் அப்பெருமானின் திருமுன்னரும், தம்முன்னர் உள்ள மெய்யடியார்களுக்கும், பிறருக்கும் விரிந்துரைப்பதற்கு ஏற்றதாக அமைந்துள்ளது. தாண்டகம் என்பது தொல்காப்பியச் செய்யுளிலக்கண மரபின்படி, எண் சீரான் வந்த கொச்சக ஒருபோகு எனக் கூறப்படும். தாண்டகங்கள் குறுந்தாண்டகம், நெடுந்தாண்டகம் என இருவகைப்படும். அறுசீர் அடிகள் அளவொத்து அமைவது குறுந்தாண்டகம், எண்சீர் அடிகள் நான்கு அளவொத்து முடிவது நெடுந்தாண்டகம் என்று அழைக்கப்படும்.

தாண்டகத் தொகுதியாகிய ஆறாம் திருமுறையிலே அமைந்துள்ள பாடல்கள் முன்னிலைப் பரவலாக அமைந்துள்ளன. இறைவனை முன்னிலைப்படுத்தி அவனது அருட் குணங்களை எடுத்துரைப்பதற்கு வாய்ப்பாக அமைந்தமையினால் தாண்டகம் என்ற யாப்புமுறையினைத் திருநாவுக்கரசு சுவாமிகள் பயன்படுத்தினார். உலக மக்களுக்கும் தமது நெஞ்சத்திற்கும் தெளிவாக விரித்துரைப்பதற்கு ஏற்ற சொல்நடையும் வேகமும் திருத்தாண்டகங்களின் சிறப்பம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் எளிதில் பொருள் விளங்கும் வண்ணம் உணர்ச்சி வேகத்துடன் இறைவன் பெருமைகளை நினைந்து உருகும் வகையில் அமைந்த தாண்டகங்கள் மனதைக் குழைய வைப்பனவாக உள்ளன இறைவனது இயல்பினை இரண்டாம் வேற்றுமை உருபு அடுக்கி வரும் நிலையில் "அரியானை அந்தணர் தம் சிந்தையானை" என்ற பதிகத்தில் நாவுக்கரசர் ஐந்து வகையாகச் சொல்கின்றார். இறைவன் புலன்களால் அறிதங்கு அரியவன். அந்தணர்களுடைய சிந்தனையிலே கருத்துப் பொருளாக இருப்பவன். பொருள் அறிவதற்கு அரிய வேதத்திலே இரகசியப் பொருளாக இருப்பவன். நுட்பப் பொருளாகிய அணுவாக இருப்பவன். யார்க்கும் தெரியாத இயல்பினை உடையவன், என்ற வரிசையிலே ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கிச் செல்கின்றார்.

"அரியானை அந்தணர்தம் சிந்தை-
யானை அருமறையின் அகத்தானை அணு
வையார்க்கும் தெரியாத தத்துவனை".

எனத் தொடரும் பாடலிலே பெரும் பற்றைப் புலியூர் நடராசப் பெருமானைப் பாடுகின்றார். இப்பாடல்கள் இறைவன் புகழைப் "பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே" என அடித்துக் கூறுகின்றார்.

இறைவனை முன்னிலைப்படுத்திக் கூறும் பதிகங்களில் எல்லாம் வினை முற்றுக் களையும் வினை எச்சங்களையும் ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கிச் செல்வது நாவுக்கரசரின் இயல்பாகக் காணப்படுகின்றது. இறைவன் இன்ன இன்ன இடங்களில் இன்ன இன்ன தன்மையில் எழுந்தருளியுள்ளார் என இறைவனின் அடையாளங்களை எடுத்துரைக்கின்றார்.

குறிப்பாக "வேற்றாகி விண்ணாகி நினறாய் போற்றி" என்ற பதிகத்திலே இறைவனை முன்னிலைப்படுத்திப்பாடும் திருநாவுக்கரசர் "அரவனையானைச் சிந்தித்து அரற்றும் அடி" எனத் தொடங்கும் பதிகத்திலே இறைவனது திருவடிப் பெருமைகளை அடுக்கிச் செல்கின்றார்.

திருவடித் திருத்தாண்டகம் என்ற பதிகம் நெஞ்சை உருக்கும் தன்மையினது. திருவதிகை வீரட்டானத்திலே எழுந்தருளியிருக்கும் இறைவனுடைய திருவடிகளை எப்படி எல்லாம் பாராட்டலாமோ அப்படி எல்லாம் பாராட்டுகின்றார். "நறுமலராய் நாறும் சேவடி" என்றும், நடுவாய் உலகம் நடாய அடி என்றும், செறிகதிரும் திங்களுமாய் நின்ற அடி என்றும்: தீத்திரளாய் உள்ளே திகழ்ந்த அடி என்றும், மறுமதியை மாசுகழுவும் அடி என்றும் திரு வீரட்டானத் தெம் செல்வன் அடியைப் புகழ்ந்து கூறும் பதிகம் திருநாவுக்கரசரின் உணர்வனுபவங்களைக் காட்டும் தலைசிறந்த பதிகமாகும். பிறிதொரு பதிகத்திலே இறைவன் இயல்புகளை உலக மக்களுக்கும் தொகுத்துக் கூறும் திருநாவுக்கரசர் இறைவன் கோயில் கொண்டருளியிருக்கும் தலங்களை எல்லாம் தொகுத்துக் கூறுகின்றார். "தில்லைச் சிற்றம்பலமும் செம்பொன் பள்ளி" எனத் தொடங்கும் பதிகம் அறிவுறுத்தும் பாங்கிலே அமைந்துள்ளது. தூண்டு சுடரனைய சோதி கண்டாய் என்ற பதிகத்திலே கண்டாய் தொடரை அறிவுறுத்தும் தொடராக ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கிக் கூறுகின்றார்.

தாண்டகத் தொகுதியாக அமைந்த ஆறாம் திருமுறைப் பாடல்கள் எல்லாமே வினா விடையாகவும், அறிவுறுத்தலாகவும், முன்னிலை பரவலாகவும் அமைந்துள்ளன. இப்பதிகங்கள் எல்லாம் இறைவனது திருவருட் பெருமையினையும் உயிர்களின் சிறுமையினையும் உலக மக்களுக்கு எடுத்துரைக்கும் சொல்லோவியங்களாக அமைந்துள்ளன. இப்பதிகங்கள் யாவும் மக்களுடைய மன மாசுகளைப் போக்கி இறைவனுடைய திருக்கல்யாண குணங்களிலே மெய்யன்பர்களின் உள்ளங்களைத் திளைக்கவைக்கும் பேராற்றல் வாய்ந்தனவாக உள்ளன.

திருநாவுக்கரசு சுவாமிகளின் இறையானம அனுபவங்களை அகப்பொருட் துறையிலே அமைந்த பதிகங்கள் இனிது புலப்படுத்துகின்றன. கனவிலும் நனவிலும் தாம் இறைவனைத் தலைப்பட்டு நுகரந்த அனுபவங்களை எல்லாம் நற்றாய் கூற்றாகவும் செவிலித்தாய் கூற்றாகவும், தலைவி கூற்றாகவும் கூறியுள்ளமை அவதானிப்பதற்குரியது. புணர்ந்துழி உவகையும், பிரிந்துழிக் கலக்கமும் எய்தும் உள்ளத்தைக் காண்கின்றோம். கைலாசபதியாகிய இறைவன் எங்கெங்கு எல்லாமோ இருக்கின்றான் எனக் கூறிய நாவுக்கரசர் "அவன் உன் கண உள்ளானே!" என இன்பம் அடையும் காட்சி சிறப்பானது. கைலாயத்து உச்சியுள்ளான் காளத்தியான் அவன் உன் ஈண்ணுள்ளானே என்னும் போது திருநாவுக்கரசரின் தன்னிறைவை உணர முடிகின்றது.

திருநாவுக்கரசர் தாம் பெற்ற வாழ்வனுபவங்களை எல்லாம் ஒருமுகப்படுத்திக் கூறுவதற்குத் திருத்தாண்டங்களை வாய்ப்பானதொரு பதிகமுறையாகப் பயன்படுத்தியுள்ளார் அப்பன் அருளாமையினாலே சமண சமயத்தைத் சார்ந்த முன்னரும், பின்னர் இறைவன் அருளிய சூலை நோயினால் துன்புற்றுச் சமண சமயத்தைச் துறந்து திருநாவுக்கரசர் ஆகிய நிலைமையினையும் பல திருத்தாண்டகங்களில் தெளிவாகக் கூறுகிறார். வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாற் சிறுமை தப்பித் தாழ்வெனும் தன்மையோடும் சைவமாம் சமயம் சார்ந்த அனுபங்கள் எல்லாம் திருத்தாண்டகங்களிலே அகச்சான்றுகளாக அமைகின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாவுக்கரசர் புகழை சேக்கிழார் பெருமான் புகழ்ந்துரைக்கும் போது 'அறந்தரு நாவுக் கரசு' எனப் போற்றுகின்றார். இறைவனது திருவருளே நல்லறங்கள் எல்லாவற்றிற்கும் பற்றுக்கோடாக அமைந்தது என்பதை உணர்ந்த நாவுக்கரசர் தம்மைச் சமண சமயத்திலே புகுத்தி அறிவுரைகள் பலவற்றையம் ஓதியுணரச் செய்து, அறங்களுக்கு எல்லாம் அடிப்படையாக விளங்கும் சிவஞானச் செல்வத்துள் அழுந்த வைத்த பேரருளின் திறத்தை எல்லாம் நினைவு கூறும் வகையிலே திருத்தாண்டகப் பதிகங்கள் பலவற்றைப் பாடியுள்ளார். அறத்தின் பெருமையையும் அருளொழுக்கத்தின் இன்றியமையாமையையும் திருநாவுக்கரசர் தமது திருத்தாண்டகங்கள் மூலம் உலகினர்க்கு எடுத்துக்காட்டியுள்ளார்

இறைவனைப் போதொடு நீர் சுமந்தேந்திப் புறத்தே வழிபாடு செய்வோர் பெறும் அக அனுபவங்களை எல்லாம் திருநாவுக்கரசர் பதிகங்கள் விளக்கி நிற்கின்றன. அகத்தும் புறத்தும் இறைவனை இடையறாது வழிபாடு செய்யும் பக்திமை உள்ளத்தைச் சேக்கிழார் பெரிய புராணத்திலே எவரும் பின்வரும் அடிகளில் நன்கு உணர்த்தியுள்ளார்.

'வார்ந்து சொரியுங் கண்ணருவி
மயிர்ககால் தோறும் வரும்புளகம்
ஆர்ந்த மேனிப் புறத்தலைப்ப
அன்பு கரைந்தென் புள்ளலைப்பச்
சேர்ந்த நயனப் பயன்பெற்று.....

என வரும் சேக்கிழார் பெருமானின் சொல்லோவியம், மெய்தான் அரும்பி விதிர் விதிக்கும் திருநாவுக் கரசரின் உள்ளத்தையும் உணர்வையும் நன்கு விளக்குவதாக அமைகின்றது.

பல திருத்தாண்டகங்களில் யாக்கையின் இழி நிலையையும் நிலையாமையினையும் தன் நெஞ்சிற்கு அறிவுறுத்திப் பாடுகின்றார். வினா விடையாக இறைவனோடு உரையாடும் கோக்கில் நெஞ்சத்தினை வெளிப்படுத்தும் நாவுக்கரசர் தொண்டர் பெருமையினையும், அடியார்க்கு அடியாராய் வாழும் நிலையே தமக்குப் பேரின்பம் தரும நிலை எனவும் அழுத்தியுரைத்துள்ளமையும் மனங் கொள்ளத்தக்கது.

ஒப்பற்றவனாகிய இறைவனுக்கு ஆட்பட்ட உத்தமர்களாகிய மெய்யடியார்களின் உள்ளத் துறதியை "வானத்துலங்கிலேன் மண் கம்பமாகிலேன்" என்ற பாடலில் புலப்படுத்திய நாவுக்கரசர் பெருமான் இறைவன் எப்பொழுதும் மடமவனும் அடியார் தம் மனத்தினுள்ளார் எனக் கூறுவதுடன் நில்லாது, திருவாலங்காட்டுத் திருத்தாண்டகத்தில் திருவாலாங்காட்டுத் திருத்தாண்டகத்தில் திருநிறை மெய்யடியார்களை எல்லாம் நினைவு கூர்ந்துமுள்ளார்.

புராணச் செய்திகளை எல்லாம் விரிந்துரைத்து ஆத்மீக யாத்திரையின் மூலம் பெற்ற அடிகளார்ச், சிந்தனைகளாக அமைபவை திருநாவுக்கரசு சுவாமிகளின் திருத்தாண்டகங் களாகும். மறுமாற்றத் திருத்தாண்டகம், வினாவிடைத் திருத்தாண்டகம், அடையாளத் திருத் தாண்டம் ஆகியன யாவும் பொருளமைப்பால் பெயர் பெற்றமையாகும். நின்ற திருத்தாண்டகம், திருவடித்திருத் தாண்டகம், புக்க திருத்தாண்டகம், காப்புத் திருத்தாண்டகம், ஏழைத் திருத்தாண்டகம், போற்றித் திருத்தாண்டகம் ஆகியன பாடல் தோறும் பயின்றுள்ள சொற்பொருளமைப்பால் பெயர்பெற்றவையாகும்.

கல்லாதன வெல்லாம் கற்பித்தானை, காணாதனவெல்லாம் காட்டினானை, கவிதா அனுபவத்துடன் வெளிப்படுத்திய திருநாவுக்கரசு சுவாமிகளின் திருத்தாண்டகங்கள் யாவுமே சொல்லில் பொருள் அறிந்து அதனூடே தூய உணர்ச்சிகளை வெளிப் படுத்தும் தலையாய சொல்லோவியங்களாகும்

முன்னோக்கிச் செல்ல, அளவற்ற ஆற்றல், அளவு கடந்த அஞ்சாமை, அளவில்லாத பொறுமை இவையே நமக்குத் தேவை. இவை இருந்தால் மட்டுமே மகத்தான காரியங்களை நம்மால் சாதிக்க முடியும்

- விவேகானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணபத்திய நெறியின் தோற்றமும் வளர்ச்சியும்

திரு K. புண்ணியமூர்த்தி
B.A, Dipin Edu

விநாயகர் வழிபாடு ஆரியர் இந்தியாவிற்கு வந்த காலத்திற்கு முன்னரே அதாவது சிந்துவெளி நாகரிக காலத்தில் வாழ்ந்த மக்கள் வழிபட்டு வந்திருக்கவேண்டுமென இந்திய வரலாறு எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. எந்தக் கருமத்தையும் செய்ய முற்படுகையில் இந்துக்கள் கணபதியை வழிபட்டே செய்யத்தொடங்குவர். 'ஓம்' என்ற பிரணவப்பொருளின் உருவமாயுள்ள கணபதியை முழுமுதலாக வழிபடுபவர்களை காணபத்தியர்கள் என்பர், கணபதியே பரம்பொருள் என்ற கோட்பாடு காலங்காலமாக இந்து மக்களால் அநுசரிக்கப்பட்டு வருகிறது.

காணபத்திய நெறியின் தொடக்கம் பற்றிய சிந்தனைகள் வேத. உபநிடதங்களிலும், ஆகமங்களிலும் காணப்படுகின்றன. இதிகாச புராணங்களில் விநாயகரைப் பற்றிச் சிறப்பான கருத்துக்கள் காணப்படுகின்றன. வனவாச காலத்தில் பஞ்சபாண்டவர்கள் சூதமுனிவரின் உபதேசத்திற்கிணங்க விநாயகசதுர்த்தி விரதம் அநுஷ்டித்துள்ளார்களென வரலாறு கூறுகிறது.

சிவபுராணம், கந்தபுராணம் சுப்பிரபேதம் போன்ற நூல்களில் விநாயகர் தோற்றமும், வளர்ச்சியும் பற்றிக் குறிப்பிடப்படுகிறது. முத்கல புராணம், கணேச புராணம் என்பனவும் விநாயகர் பெருமையை எடுத்து விளக்குகின்றன. ஆகமங்களில் கணபதி ஹோமத்திற்கு முதன்மையளிக்கப்படுகிறது. கி. பி. 8ம் நூற்றாண்டில் வாழ்ந்த சங்கரர் இந்து சமயத்தை அறு வகைச் சமயங்களாகப் பிரித்தார். இருந்த போதும் விநாயகர் அறுவகைச் சமயங்களிலும் முதன்மை கொடுத்து வணங்கப்படுகிறார். கணபதி வழிபாட்டின் தொன்மை பற்றி கணேசபஞ்ச ரத்தினம், விநாயகர் கவசம், விநாயகர் அகவல், மூத்த விநாயகர் மும்மணிக்கோவை, திருநாரையூர் விநாயகர் இரட்டைமணிமாலை ஆகிய நூல்கள் சிறப்பித்துக் கூறுகின்றன. இவற்றை விட காணபத்தர்களுக்கு ஆதாரமான முக்கிய நூல்கள் கணபதி உபநிடதம், ஹேரம்ப உபநிடதம் என்பனவாகும்.

புத்த மதத்தினரும் கணபதி வழிபாட்டிற்கு மதிப்பும், மரியாதையும் அளித்தனர். தமது சீடர் ஆனந்தர் என்பவருக்கு புத்தர் கணேசரைத் துதிபாடும் அநுபூதி மந்திரம் ஒன்றை அருளி வழங்கியதாக வரலாறு கூறுகிறது. "கணபதி இருதயம்" என்பது அம் மந்திரத்தின் பெயர் ஆகும். பௌத்தர்கள் விநாயகரை புத்த நாயகர் என்று பிரிக்கிறார்கள். இன்றும் கூட "கணதெய்யோ" என பௌத்தர்கள் விநாயகரை வழிபடுவதைக் காணலாம்.

வைணவர்கள் சிறப்பாக "விஷ்வக் சேனர்" என்றும், தும்பிக்கையாழ்வார் என்றும், சேனை முதலி என்றும் துதித்து வணங்குகிறார்கள். ஜைனர்கள் இவரை அருகநாயகர் என்று போற்றுகின்றனர். பிற மதத்தவர்கள் கூட கணபதியை முழுமுதற்கடவுளாக வழிபடு கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் பெயர்களும் விளக்கங்களும் :-

| | | |
|---|---|---|
| விநாயகர் | - | தனக்கு மேலே தலைவர் இல்லாதவர் |
| கணபதி | - | பூதகணங்களுக்கொல்லாம் தலைவர் |
| கஜானனா் | - | யானை முகமுடையவர் |
| வக்கிரதுண்டர் | - | வளைந்த துதிக்கையை உடையவர் |
| லம்போதரர் | - | யானைவயிற்றை உடையவர் |
| ஆகுரதன் | - | எலிவாகன முடையவர் |
| விக்னேஸ்வரர் | - | விக்கினங்களைத் தடுப்பவர் |
| சித்தி தாதா | - | தம்மை நம்புவாகளுக்குச் சித்தி களைத் தருபவர் |
| ஐங்கரன் | - | ஐந்து கரங்களை உடையவர் |
| ஏகதந்தன் | - | ஒற்றைக்கொம்பை உடையவர் |

## விநாயகர் தொடர்பான வரலாற்றுக்கதைகள் :-

கயமுகன் எனும் அசுரன் கடுந்தவம் புரிந்து சிவனிடம் பல வரங்கள் பெற்றுத் தேவர்களை எல்லாம் துன்புறுத்தினான். இத்தொல்லை தாங்காத தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டனர். அப்பொழுது கயமுகாசுரனை அடக்கித் தேவர்களுக்கு அருள் புரியுமாறு சிவபெருமான் கணபதிக்குக் கட்டளையிட கணபதியும் கயமுகனுடன் பெரும்போர் புரிந்தான். ஆனால் அவன் சாகாவரம் பெற்றவன் என்பதால் அவனை அழிக்க முடியவில்லை. எனவே தனது வலது கொம்பை ஒடித்து அவன்மீது எறிந்தார். அப்போதும் அவனது உடல் பிளந்ததே தவிர அவன் இறக்கவில்லை. பெருச்சாளி வேடம் கொண்டு மீண்டும் பொருதினான். அப்பொழுது கணபதி அவனுக்கு மெய்யறிவு புகட்டி அருள் புரிந்தார். ஞானம் பெற்ற அவ் அசுரன் "ஐயனே நான் உனக்கு அடிமை" என்று கணபதியின் பாதங்களைச்சரணடைந்தான். அப்போது தேவர்கள் கயமுகனுக்குச் செய்தது போல் ஆயிரத்து எட்டு (1008) தரம் தோப்புக்கரணம் போட்டனர். ஆனால் தனக்கு மூன்று முறை தோப்புக்கரணம் போட்டால் போதும் என்று திருவாய் மலர்ந்தருளினார். அதுவே இன்றும் வழக்கத்தில் உள்ளது.

அகத்தியரது கமண்டல நீரைக் கவிழ்த்து காவிரிநதியை உண்டாக்கியமையும் அம்மை அப்பனை வலம் வந்து மாங்கனி பெற்றமையும் விநாயகரைப் பற்றியாவரும் அறிந்த கதைகளாகும்.

இயமனின் திருக்குமாரர்களில் ஒருவனான அனலாசுரன் எனும் கொடியவனை சிவன் ஆலகாலவிஷத்தை மகிழ்ச்சியுடன் அருந்தியது போல் விநாயகரும் அவனே உண்டு அடியவர்களைத் துன்பத் தளையிலிருந்து காத்தருளினார். அதே நேரம் எல்லா உயிர்களின் வயிற்றிலும் கொடிய வெப்பம் உண்டாகி அல்லலுற ஆரம்பித்தனர். அப்போது இறைவனைக் குளிரச் செய்வதற்காக முனிவர்கள் அறுகம்புல்லை மாலையாகச் சொரிந்தனர் இதனால் விநாயகரின் வெப்பம் தணிந்து மகிழ்ச்சி பெருகியது.

அம்பிகையின் சாபத்திற்கு ஆளாகி கண்ணிழந்த பாம்பாக மாறிய திருமால் விநாயக விரதத்தை அநுஷ்டித்துத் துன்பம் நீங்கி சுயவடிவம் பெற்றதாகப் புராணங்கள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கிரமாதித்தனின் மனைவி இலக்கண சுந்தரி விநாயக சஷ்டி விரதத்தை அநுஷ்டிப்பதாக உறுதி பூண்டு சில நாள் நோற்றபின் அவ் உறுதியை மறந்ததால் இன்னல் பட்டாள். பின் ஔவையாரின் அறிவுரைப்படி முறையாக அநுஷ்டித்து அருள் பெற்றாள்.

இவை தவிர விநாயகர், ஔவையாரை விநாயகர் அகவல் பாடச்செய்து கைலை சேர்ப்பித்தார். அத்துடன் தக்கன் இந்திரன், மன்மதன், சந்திரன், இராவணன், பாண்டவர்கள், மெய்கண்டதேவர், நம்பியண்டார் நம்பி முதலியோர் விநாயகரை வழிபட்டு வரம் பெற்றுள்ளனர்.

## விநாயகரும், தத்துவ விளக்கமும் :-

இந்துக்கள் எதனை எழுதும்போதும் பிள்ளையார் சுழி இட்டே தொடங்குவது வழக்கம். இது தொன்றுதொட்டு இருந்துவரும் வழக்கமாகும் பிள்ளையார் சுழி (உ) ஓங்காரத்தின் (ஓம்) சுருங்கிய வடிவமாகும். ஒலி வடிவமாகிய வட்டமும், வரிவடிவமாகிய கோடும் சேர்ந்தது பிள்ளையார் சுழி எனக் கருதப்படுகிறது. கணபதியின் துதிக்கை ஓங்காரத்தையே குறித்து நிற்கிறது.

கணேசர் ஐந்தொழில்களையும் செய்வதாக அறிஞர்கள் கூறுகின்றனர். இவரது எழுத்தாணி பிடித்த கரம் படைத்தலையும், மோதகம் ஏந்திய கரம் காத்தலையும், அங்குசம் கொண்ட கை அழித்தலையும், பாசம் கொண் கை மறைத்தலையும், அமுத கலசம் ஏந்திய கரமான துதிக்கை அருளலையும் குறித்து நிற்கிறது.

"கணபதி"யில் உள்ள "க" என்பது ஞானம் என்றும் "ண" என்பது மோட்சம் என்றும், "பதி" என்பது இருப்பிடம் என்றும் பொருள் கொள்ளப்படுகிறது. 'கணேசன்' என்ற சொல்லில் "க" மனோவாக்குகள் என்றும் "ண" என்பது அவற்றைக் கடந்த நிலை என்றும் 'ஈசன்' என்பது இறைவன் என்றும் கொள்ளப்படுகின்றது.

அனைத்துத் தெய்வங்களினதும் கூட்டு அமைப்பே கணபதி என்று சங்கரர் கூறுகிறார். கணபதியின் உருவ அமைப்பில் அனைத்து தெய்வங்களும் "மந்திர ஒளி" ரூபமாக இணைந்துள்ளன. கணபதியின் நாபி (வயிற்றுச்சுழி) பிரம்ம ரூபம், முகம் திருமால் வடிவு, கண் சிவவடிவம், இடப்பாகம் சக்தி ரூபம், வலப்பாகம் சூரியவடிவம் என சங்கரர் கூறுகிறார்.

கணபதியின் முகம் மிருகமுகம், உடல் தேவ உடல், கால்கள் பூதகணங்கள், ஒற்றைக்கொம்பு ஆண்யானை, ஒடிந்த கொம்பு பெண்யானை, எனவே விநாயகர் தேவ உடல் பெற்றிருப்பதால் உயர்திணையாகவும், மிருகமுகம் அமைந்திருப்பதால் அஃறிணை வடிவமாகவும் அதிசய தோற்றமளிக்கிறார். ஆகவே உபநிடத மகாவாக்கியமாகிய "தத்துவமஸி" என்பதின் வடிவமே மகாகணபதி எனலாம்.

விநாயகரின் பெருவயிறு பிரபஞ்சம் முழுவதையும் தம்முள் அடக்கியவர் என்று பொருள்படும். விநாயகருக்கு விருப்பமான மோதகம் விநாயகர் எல்லோருக்கும் இன்பமயமாக இருக்கிறார் என்ற ஞானதத்துவத்தையே எடுத்து விளக்குகின்றது. அவருடைய வாகனமாகிய பெருச்சாளி நமக்குள்ளிருந்து நம்மையே அழிக்கும் கள்ளத் தன்மையான உலகப்பற்றுக்களைக் குறித்து நிற்கிறது. பல இடங்களில் விநாயகர் நின்ற உருவிலும் அமர்ந்த நிலையிலும் நடனமாடும் நிலையிலும் காணப்படுகிறார். அவரது உருவத்தின் வலம்புரி, இடம்புரி என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு விதம் உண்டு. துதிக்கை வலப்புறமாகத் திரும்பியிருந்தால் "வலம்புரி விநாயகர்" என்றும் இடதுபுறம் திரும்பியிருந்தால் "இடம்புரி விநாயகர் என்றும் அழைக்கப்படுகிறார். எனவே விநாயகர் தத்துவ சொருபமாகவே வீற்றிருந்து அருள்பாலிக்கிறார் எனலாம்.

## ❖ விநாயகர் வழிபாடும் விசேட தினங்களும் :-

சுக்கில சதுர்த்தி, சங்கடஹர சதுர்த்தி ஆகிய இரண்டு விசேட நாட்களும் கணபதி உபாசனைக்கு மிகச் சிறந்த புண்ணிய நாட்களாகும். இந் நாட்களில் ஹோமம், செபம் இரண்டும் அதிகளவில் செய்தால் வெகுவிரைவில் மந்திரசித்தி கிட்டும் என்பதே சித்தர்கள் வாக்கு ஆகும். "ஓங்கார ரூபாய நம" என்பது கணபதிக்கு வழிபாடு செலுத்தும் மந்திரம் ஆகும். இதன் பொருள் "ஓம் என்ற பிரணவ மந்திர வடிவினருக்கு வணக்கம்" என்பதாகும்.

"ஓம் தத்புருஷாய வித் மஹே<br>வக்ர துண்டாயதி மஹி<br>தந்தோதந்தி : பிரசோதயாத்"

என்பதே கணபதியின் மூல உபாசனா மந்திரம் இம் மந்திரத்தை சிறந்த உபாசகர் மூலம் உபதேசம் பெற்று, விடாமல் தினமும் 108 தடவை செபித்து வந்தால் எல்லாத் தடைகளையும் கடந்து ஒருவர் வெற்றிபெறமுடியும் என ஞானிகள் கூறுகின்றனர்.

விரும்பிய வேளையில், விரும்பிய இடத்தில் ஆவாஹனம் ஆகும் கடவுள் கணபதி ஆவார், ஆற்றங்கரைகளிலும் குளக்கரைகளிலும் ஆலமரத்தடிகளிலும், அரசமரத்தடிகளிலும் வீற்றிருந்து அருள்புரிபவராவார். பசும் சாணத்திலும், அரைத்த மஞ்சளிலும், அறுகம்புல்லிலும், வெல்லத்திலும் கல்லிலும் அடியார்களுக்காக எழுந்தருளி விநாயகர் அருள்பாலிக்கிறார். மார்கழி மாதத்தில் வீட்டு வாசலில் பிள்ளையாரை மஞ்சளில் அல்லது சாணத்தில் பிடித்து பூசணிப்பூ வைத்து வணங்குவர். பிள்ளையாரின் உருவத்தை கருங்கல்லில் பொழிந்து எடுப்பார். வேறு சிலர் ஐம்பொன்னால் அமைப்பர். பிரதிஷ்டை செய்யும் விக்கிரகங்கள் கருங்கல்லால் செய்யப்படும். எழுந்தருளி விக்கிரகம் ஐம் பொன்னால் அமைக்கப்படும்.

கணபதி பூசையில் அறுகம்புல் 21, புஷ்பம் 21, அதிரசம் 21, மோதகம் 21, பழம் 21 என இருபத்து ஒன்றாகவைத்து வழிபடுவர். விநாயகருக்கு வெண்பொங்கல், அவல், அரிசி, கரும்பு, வில்வம், வாழைப்பழம், தேங்காய், கொழுக்கட்டை, மோதகம், சுண்டல், வடை, அப்பம், எள்ளுருண்டை, பாயசம் என்பவற்றுடன் கொய்யாப்பழம், விழாம்பழம், நாவற்பழம், பிரப்பம் பழம், வெற்றிலை பாக்கு என்பவற்றை வைத்து வழிபடுவர். இவை அவருக்கு உவப்பான பொருட்கள் ஆகும்.

விநாயகருக்கு இருபத்தியொரு பொருட்கள் வைத்து வழிபடுவதற்குரிய தத்துவ விளக்கத்தைச் சங்கரர் கூறியுள்ளார். நமது உடம்பில் ஞானேந்திரியம் - 5 அவை செயற்படும் காரியங்கள் - 5 அதுபோலவே கர்மேந்திரியம் - 5, அவற்றின் செயல்கள் - 5, இவ் எண்ணிக்கை - 20 உடன் மனம் எனும் கருவியையும் இணைத்து 21 ஆக கணபதியை பூசை முறையில் வழிபடுவர். விநாயகரை தோப்புக்கரணம் இட்டும், தலையில் குட்டியும் வழிபடுவர். களி மண்ணினால் செய்த பிள்ளையாரையே பூசை செய்வது சிறப்பானது என்று நீண்ட காலமாகவே மக்கள் பூசை செய்து வருகின்றனர். சிலர் புற்று மண்ணாலும் பிள்ளையார் பிடித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபடுவதுண்டு. பிள்ளையாருக்கு உகந்தது எருக்கம் பூ, செம்பருத்திப் பூ, தும்பைப் பூ, சங்குப்பூ ஆகியவை ஆகும்.

## விநாயகர் விரதங்கள் :-

விநாயகர் விரதங்களில் விநாயகர் சதுர்த்தி, விநாயகர் சஷ்டி, சுக்கிர வாரம் என்பன முக்கியமானதாகும். சுக்கில பட்ஷத்தில் வரும் சதுர்த்தி தினத்தில் விநாயகர் சதுர்த்தி விரதம் அநுஷ்டிக்கப்படும். இவ் விரதத்தை பௌத்தர்களும் ஜைனர்களும் அநுஷ்டிக்கின்றனர். இந்துக்கள் விநாயகர் சதுர்த்தியன்று விநாயகர் அகவல், கணேச அஷ்டகம் போன்ற நூல்களைப் படித்த பின்பே உணவு உண்பர். விநாயகர் சஷ்டி விரதம் கார்த்திகை மாதத்து கிருஷ்ண பக்ஷ பிரதமை தொடக்கம் மார்கழி மாதத்து சுக்கில பக்ஷ சட்டி ஈறாகவுள்ள இருபத்தொரு நாட்கள் அநுட்டிக்கப்படும். இவ் விரதம் அநுட்டிக்கும் போது ஆண்கள் இருபத்தொரு இழையோடு கூடிய காப்பை வலக்கையிலும் பெண்கள் இடக்கையிலும் கட்டிய வண்ணம் முதல் இருபது நாட்களும் ஒவ்வொரு பொழுது உண்டு இறுதி நாளில் உபவாசமும் இருப்பர். இருபது நாட்களும் விநாயக புராணம் படிப்பதும் திருவிளையாடல்களைக் கேட்பதும் அடியவர்களின் வழமை ஆகும்.

சுக்கிரவாரம் வைகாசி மாத வளர்பிறை வெள்ளி தொடக்கம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அநுட்டிக்கப்படும். பூரண உபவாசம் இருந்தே இதனைப் பலர் அநுஷ்டிப்பர். ஒரு சிலர் பால், பழம் அருந்துவர். இந் நாள் முழுவதும் திருமுறை ஓதுதல், புராணம் படித்தல் கேட்டல், இறைதொண்டுகள் செய்தல், சமயப் பிரசங்கங்கள் கேட்டல் போன்ற நற்காரியங்களில் ஈடுபடுவர்.

மேற்கூறிய விரதங்களை விட சித்தி விநாயக விரதம், சங்கஷ்டஹர சதுர்த்தி விரதம், தூர்வா கணபதி விரதம் என்ற மூன்றும் காந்தம் முதலிய புராணங்களில் கூறப்படுகிறது. சித்தி விநாயக விரதம் காரிய சித்தியையும் பழி நீக்கத்தையும் பெற நோக்கப்படுகிறது. கிருஷ்ணர் இதனை நோற்று பிரசன சித்தைக் கொன்று சியமந்தக மணியைத்திருடிக் கொண்டதாக நேர்ந்த பழியிலிருந்து விடுதலை பெற்றார். சங்கஷ்டஹர சதுர்த்தி விரதம் நோய் கடன், சிறைவாசம், வனவாசம் எனும் துன்பங்களிலிருந்து தம்மைக் காக்க அநுஷ்டிக்கப்படகிறது. தூர்வா கணபதி விரதம் வளர்பிறைச் சதுர்த்தியில் சிறப்பாக ஆவணிமாத சதுர்த்தியில் அல்லது கார்த்திகை மாதச் சதுர்த்தியில் மூன்று அல்லது ஐந்து ஆண்டுகள் அநுஷ்டிக்கப்படுகிறது. இது சந்ததியை அடைவதற்காகவும், செல்வத்தைப் பெறுவதற்காகவும் நோக்கப்படுகிறது.

## தென்கிழக்காசிய நாடுகளில் விநாயகர் வழிபாடு:-

காணபத்தியம் இந்தியாவிற்கேயுரிய ஒரு தனிச்சமயம் எனினும் அது உலகம் முழுதும் பரந்து வியாபித்துக் காணப்படுகிறது. திபெத்து, பர்மா, ஜாவா, இந்தோசீனா, யப்பான் சீனா எனப் பல நாடுகளிலும் வழிபடப்படுகிறது. தமிழ்நாட்டில் தஞ்சைமாவட்டத்தில் பாபநாசம் தாலுக்காவில் கணபதி அக்ரகாரம் எனும் ஊரில் விநாயக வழிபாடு சிறப்பாக வழிபடப்படுகிறது. தமிழ்நாட்டில் கணபதி ஈச்சரம் எனும் தலம் விநாயக வழிபாட்டிற்குப் புகழ் பெற்றதாகும் மகாராஷ்டிரத்திலும் மும்பையிலும் ஆவணிச்சதுர்த்தி பெரு விழாவாகக் கொண்டாடப் படுகிறது. வடநாட்டில் கணேச பூஜையை பத்துநாள் வரை விமரிசையாகக் கொண்டாடுவர். கடைசி நாளன்று விநாயகரை ஊர்வலமாக எடுத்துச்செல்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்லாந்தில் மன்னனின் முடிசூட்டுவிழாவின்போது மன்னன் ஊர்வல மாகச் செல்லும் வேளையில் அந்தணர் ஒருவர் விநாயகர் சிலையைக் கையில் ஏந்திச்செல்வர் சம்பா நாட்டில் விநாயக வழிபாடு நிலவியமைக்கு சான்றுகள் உள்ளன. 'போ' நகரில் ஒரு தனிக்கோயிலும் மைசனில் இரு கோயில்களும் விநாயகர் கோயிலாக அமைந்துள்ளன.

பொராபுத்தூரில் கணபதியின் உருவம் தமிழ்நாட்டில் காணப்படுவது போலன்றி வேறுபட்டுக் காணப்படுகிறது. இக் கணபதியை கபால கணபதி என்பர். கணபதியின் பீடத்தில் வரிசையாக கபாலங்கள் இருப்பது போல அமைக்கப்பட்டிருப்பது, ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவ் உருவம் குறுகி உட்கார்ந்திருப்பது போலக் காணப்படுகிறது. சிங்காசாரி எனும் இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கணபதியின் உருவம் சிவனைப்போன்று மூன்று கண்கள் உடையதாகவும், கபாலமும், இளம்பிறையும் கொண்டதாகவும் விளங்குகிறது. கைகளில் செபமாலை யானைக் கொம்பு, மழு, சிறுகலசம் என்பன காணப்படுகின்றன. இங்கு கணபதியின் உருவம் ஒவ்வொரு வீட்டின் வாசற்படியிலும் இருக்கும் என்பர். பெருச்சாளியுடன் சிங்கமும் விநாயகரது. வாகனங்களாக சித்தரிக்கப்பட்டுள்ளது. சில உருவங்கள் கபாலங்கள் மீது அமர்ந்திருப்பது போன்றனவாகவும் உள்ளன. மகுடத்திலும், கைகளிலும் கூட கபாலங்கள் இடம்பெற்றுள்ளன.

சுமாத்திராவிலும் பல விநாயகர் ஆலயங்கள் அழிந்த நிலையிலுள்ளன. மலேசியாவில் மலாய் மொழி பேசும் இந்துக்கள் தமது வீடுகளில் விநாயகர் படங்களை வைத்து வழிபாடு செய்கிறார்கள். சிங்கப்பூரில் நூற்றாண்டு பழைமை வாய்ந்த செண்பக விநாயகர் ஆலயம் பிரசித்தி பெற்றதாகும். சிருங்கேரியில் ரத்னகற்ப கணபதி சிறப்பாக வழிபடப்படுகிறது. ரத்ன கற்ப கணபதி, சுவர்ண கற்ப கணபதி ஆகிய இரண்டும் கணபதி உபாசகர்களின் குடும்பச் சொத்தாகும். மைசூர் மகாராஜா சுவர்ண ஆஹர்ஷண கணபதி பற்றி ஒரு சிறந்த நூலை எழுதியுள்ளார். நேபாளத்திலும் இக் கணபதி சிறப்பாக வழிபடப்படுகிறார்.

தற்காலத்தில் உலகம் முழுவதும் பரந்துவாழும் இந்துப் பெருமக்கள் தாம் குடியேறிய நாடுகளில் விநாயகர் ஆலயங்களை உருவாக்கிச் சிறப்பாக வழிபாடு நடத்தி வருகின்றனர். பிற மதத்தவர்களும் எம் மதத்தை நாடும் வண்ணம் இச் செயற்பாடு அமைந்துள்ளது. ஐங்கரனை வழிபட்டு அனைவரும் நல்வாழ்வு வாழ்வோமாக.

"மேன்மைகொள் சைவ நீதி, விளங்குக உலகமெலாம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேகம் மூலம் தெய்வ சாந்நித்தியம்;

திருமதி.S.P.உதயகுமாரன்

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது ஆன்றோர் வாக்கு. திருக்கோயில்கள் எமது பண்பாட்டின் அடித்தளமாக அமைந்து ஆன்மீக வாழ்க்கைக்கு உறுதுணையாக நிறபதுடன் சமுதாய ஒற்றுமைக்கு நிலைக்களமாகவும் விளங்குகின்றன. எனவே, பண்டுதொட்டு திருக்கோயில்களை நிர்மாணித்து, அதனைப் பேணிப் பாதுகாத்தலும், பழுதடைந்த திருக்கோயில்களைப் புதுப்பித்துக் கும்பாபிஷேகம் நடத்துவதும் மிகவும் இன்றியமையாத கடமையாகவும் தேவையாகவும் விளங்குகின்றது. "எரியுறு நீர்" போல் எங்கும் வியாபகமாய் நிற்கும் இறைவன், சிவலிங்க வடிவில் தயிரில் நெய் போல விளங்கி நிற்பார். எனவே சிவலிங்கத்தை ஆலயத்தில் நிறுவி விதிப்படி வழிபாடு செய்தல் இன்றியமையாதது. இந் நோக்கத்தை நிறைவேற்றத் திருக்கோயில்களை அமைத்துக் கும்பாபிஷேகம் செய்வதும், நித்திய நைமித்திய பூசைகளை ஒழுங்காக நடத்துவித்தலும் மிக உன்னதமான சிவ புண்ணியங்களாகும்.

நாவலர் பெருமானும் ஆலயத்தின் சிறப்பையும், அவை பழுதடைந்தவிடத்து நாம் யாது செய்ய வேண்டும் என்றும் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். திருக்கோயில் முதலியவை அழிந்தால் அவற்றை முன்போலச் செய்தவர் பெறும் பயன் முன் செய்தவர் பெறும் பயனிலும் ஆயிரம் மடங்கதிகமாகும் என்றும், ஒருறுப்பு இலதேல், (சில பகுதிகள் சேதமுற்றால்) அதனை முன்போலச் செய்தவர் பெறும் பயன் முன் செய்தவர் பெறும் பயனிலும் நூறு மடங்கதிகமாகும். இதற்கு "சிவ புண்ணியத் தெளிவு" என்பதிலிந்து பிரமாணம் எடுத்துக் காட்டியுள்ளார்.

"மாதவர் மடங்களாதி வரதன் மந் திரங்களாதி
நாத மாமிலங்கமாதி நளினபுட் கரிணியாகி
சேத முற்றிடின் முன்போலச் செய்கின்றோர்க்குறும் பலந்தா
னோதுமுன் செய்தோர் தம்மி லாயிரங் குனிதமோங்கும்."

எனவே ஆலயங்களில் நித்திய பூசை நிகழ்வதற்கு வழிவகுக்கும் கும்பாபிஷேகத்தை ஆகம விதிப்படி செய்வித்தல் இன்றியமையாதது. ஆலய நித்திய பூசைகள் முறையாக நடைபெறுமாயின் காலந்தோறும் தவறாது மழை பெய்யும், வளம் பெருகும், மக்கள் நோய் நொடியின்றிச் சிறப்புற்று வாழ்வார்கள். இறை கைங்கரியங்களில் உன்னதமாகப் போற்றப்படும் பிரதிஷ்டை இறை வழிபாட்டுக்கு வழியமைத்துத் தருகிறது. இக்கிரியைகளில் வேத மரபும், ஆகம மரபும் சிறப்பாக மூன்று அம்சங்களில் இணைவதைக் காணலாம்.

இயற்கைச் சக்திகளை தெய்வீக நிலைப்படுத்தி வழிபடுதல்
அக்கினி வழிபாடு
மந்திரங்களின் பிரயோகம்

வேதங்களில் இயற்கையோடு இயைந்த மூவகை நிலைகளில் (ஆகாயம், பூமி, இரண்டிற்கும் இடைப்பட்ட பகுதி) சூரியன், அக்கினி, சோமன், வாயு, பர்ஜன்னியன் போன்றவை தெய்வங்களாக வழிபடப்பட்டவை குறிப்பிடத்தக்கது. பஞ்ச பூதங்களாகிய இயற்கை சக்திகள் தெய்வீக நிலைப்படுத்தப்பட்டன. ஆகமம் கூறும் பிரதிஷ்டையிலும் இவ்வைந்து இயற்கை சக்திகளும் முக்கியத்துவம் பெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பாபிஷேக தத்துவம் என்ன? விக்கிரக பிரதிஷ்டை என்பது யாது? கும்ப தீர்த்தத்தில் இறைவனை ஆவாஹனம் செய்து, யாகம் நடத்தி, மந்திர சக்தியை உருவேற்றி, அந்தக் கும்ப தீர்த்தத்தை இறை பிம்பத்திற்கு அபிஷேகம் செய்வதே கும்பாபிஷேகம். இறைவனின் உடலாகக் கும்பத்தையும், மேல் சுற்றப்பட்ட நூல் 72,000 நாடி நரம்புகளையும், உள்ளே ஊற்றப்பட்ட நீர் இரத்தமாகவும், அதனுள் போடப்பட்ட ஸ்வர்ணம் ஜீவனாகவும், மேலே வைக்கப்பட்ட தேங்காய் தலையாகவும், கும்பத்தின் கீழ் பரப்பப்பட்ட தானியம் ஆசனமாகவும் பாவித்து, வஸ்திரம், சந்தனம், புஸ்பம் இவற்றால் அலங்கரித்து யாக மேடையில் அமைப்பர். இந்த சாதாரண கும்பம் உயிர் கலசமாக, ஜீவ கலசமாக மாறுகிறது. தர்ப்பைப் புல்லைக் கலசத்தின் மேல் வைத்து ஆராதிக்க வேண்டும். யாகம் செய்யாது எந்த ஒரு கருமமும் பூர்த்தியாகாது. யாகத்தில் திரவியங்களையும், நெய், சமித்து அவிசு முதலியவற்றை வேதமந்திரங்கள் கூறி, ஆகதியாக அளித்து, புலப்படாத சக்தியை கும்பத்தில் உருவேற்றுவது தான் முறையாகும்.

இறைவனை வழிபட விக்கிரகத்தில் எழுந்தருளச் செய்வதற்காக பஞ்ச பூதங்கள் ஐந்தினையம் குறித்து நிகழும் கிரியைகள் கும்பாபிஷேகக் கிரியையின் உயர் நிலையை எடுத்துக் காட்டுகின்றன. இக் கிரியை நிகழ்வதற்கு அமைக்கப்படும் யாகசாலை ஆகாய வெளியைக் குறிக்கிறது. குண்டங்களில் அக்கினியும் வாயுவும் ஒன்றிணைந்து விளங்குகின்றன. யாகசாலை மையத்தில் விளங்கும் வேதியில் அமையும் கும்பத்தில் இருப்பது நீர். இப் பஞ்ச பூதங்களின் ஒடுக்கம் இறுதியில் பூமியோடு தொடர்புடைய திருவுருவத்தில் நிறைவய்துகின்றது யாகசாலை முப்பத்தாறு தத்துவஸ்வருபமானது. அட்ட மூர்த்தங்கள் அடங்கியது. ஒன்பது குண்டங்களில் ஒன்பது அக்கினி வளர்க்கப்படும். யாக குண்டங்களைச் சுற்றி, முறுக்கிய பச்சைத் தர்ப்பைகளைப் பரப்பி, ஆல், அரசு முதலிய சமித்துக்களை குண்டத்திலிட்டு, கடைந்தெடுக்கப்பட்ட சுத்தமான அக்கினி கொண்டு அதற்குரிய மந்திரங்களைச் சொல்லித் தெய்வங்களை மனதில் தியானித்து ஸ்ருக், சுரவம் என்னும் உபகரணங்களைக் கொண்டு நெய் சொரிந்து அக்கினி வளர்க்க வேண்டும். இவ்வாறு மந்திரம், கிரியை பாவனை மூலம் வளர்க்கப்படும் அக்கினியிலிருந்து எழும் புகையும், வேத ஒலி தேவாரத் திருமுறை பாராயண ஒலியும் அருட் சக்தியைத் தூண்டி பிம்பத்தில் பிரகாசிக்கச் செய்யும்.

விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்யும் முன் யந்திரத்திற்குள் பொன், வெள்ளி, வைரம் முதலிய மதிப்பு மிக்க பொருள்கள் போட்டு மூடப்படுகின்றன. பின் விக்கிரகத்தை அமைத்து மூலிகை மருந்துகளால் வலுப்படுத்தி, மந்திரங்களுடன் பிரதிஷ்டை செய்யப்படும். இவ்வாறாக உலோக சக்தி, மனோ சக்தி, மந்திரசக்தி, யந்திர சக்தி, ஆன்மசக்தி ஆகிய பலவகை சக்திகளால் கல் தெய்வமாகிறது. இவ்வித சக்திகளால் கல் விக்கிரகம் ஈர்ப்புச் சக்தி, உயிர்ப்புச் சக்தி கவர்ச்சிச் சக்தி பெற்று விடுகிறது. தெய்வீக சக்தியைத் திரட்டி மூர்த்தி வடிவில் சேமித்து வைப்பதே ஆலயங்களில் விக்கிரகங்கள் அமைப்பதன் தத்துவம். இறைவன் விஷேடமாக இருக்குமிடம் விக்கிரகம்.

வேத காலத்தில் தெய்வங்களை கூவியழைத்து வழிபட உதவிய பாடல்கள் மந்திரங்கள் எனப் போற்றப்பட்டன. "மந்திரங்கள் இன்றேல் கிரியைகள் இல்லை" எனக் கூறுமளவிற்கு ஆகமங்களில் மந்திரங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. உள்ளத்தை இறைவன் பால் ஈடு கொள்ளச் செய்யவும், இறைவனை உணரவும், தெய்வீக சக்தியை ஏற்படுத்தவும் மந்திரங்கள் தூய்மையுடன் உச்சரிக்கப்படுகின்றன. மந்திர ஒலி நித்தியமானது. அத்தகைய மந்திர ஒலியே கிரியைகளுக்குரிய ஆதார சுருதியாகும். தெய்வீக சக்தி வாய்ந்த வேதாகம மந்திரங்களைத் திருக்கோயிற் கிரியைகளின் போது உச்சரிக்கும் பொழுது, கல்லினாலும் உலோகத்தினாலும் உருவாக்கப்பட்ட விக்கிரகங்கள் தெய்வீகப் பொலிவு பெறுகின்றன. விக்கிரகத்தில் இறைவன் நன்கு விளங்கும்படி சாந்நித்தியம் கொள்ளச் செய்வதே பிரதிஷ்டை ஆகும். பிரதிஷ்டை நிலையைக் குறிப்பதே கும்பாபிஷேகம் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகசாலையில் நடைபெற வேண்டிய கிரியைகள் முற்றுப் பெற்றபின் மீண்டும் தெய்வீக சக்தி ஆலய விக்கிரகத்திடம் அமைய வேண்டும். இச்சக்தியை செலுத்தும் தர்ப்பைக் கயிற்றின் வழி, அச்சக்தி கும்பத்திலுள்ள நீரினால் சேர்க்கப்பட்டு, விக்கிரகத்தின் மீதும், கோபுர கலசத்தின் மீதும் அபிஷேகம் செய்வது முறைமையாகும்.

கோபுர கலசத்தை நாம் நோக்கும் போது அதன் அடிப்பாகம் விரிந்த தாமரை இதழ் போல தோற்றமுள்ளது. மேற்பாகம் கண்டமெனப்படும். இது ஒரு தண்டு போன்றது. இதையடுத்து அரடா என்ற அங்கம். அரடா வட்ட வடிவில் பருமனான தோற்றமுள்ளது. இதனையடுத்து மீண்டும் கண்டம் என்ற தண்டுப் பகுதி. இதன் மேல் கலசத்தில் தான் குடம். இக்கலசங்கள் ஆலய விமானத்திற்கு அடிகூட்டுவனவாகும்.

கும்பாபிஷேகத்தைக் குடமுழுக்கு, குட நன்னீராட்டு விழா, பிரதிஷ்டை என்றும் கூறுவர். ஆலயங்களில் கும்பாபிஷேகமானது பல்வேறு நிலைகளில், உரிய ஒழுங்கில் நிகழ்த்தப்பட்டு வருகிறது. ஆவர்த்தனம், அநாவர்த்தனம், புனராவர்த்தனம் அந்தரிதம் என நான்கு வகையாக கும்பாபிஷேகம் வகைப்படுத்தப்பட்டள்ளது. புதிதான ஓரிடத்தில் மூர்த்தியை வைத்துப் பாலப் பிரதிஷ்டை செய்து பூசித்து, புதிதாகக் கோயில் கட்டி, பாலாலய மூர்த்தியைக் கும்பத்தில் எடுத்து, பின்னர் மூலத்தானத்தில் இருக்கும் மூர்த்தியைக் கும்பத்தில் எடுத்து, பின்னர் மூலத்தானத்தில் இருக்கும் மூர்த்தியில் சேர்த்து அபிடேகம் செய்வது ஆவர்த்தன கும்பாபிஷேகம் ஆகும். பல காலத்திற்கு முன் அமைக்கப்பட்ட ஆலயத்தில் தொடர்ந்து நித்திய நைமித்தியங்கள் நிகழும் காலத்தில், எதிர் பாராத தீயினால் பாதிப்புறுதல், காடு படர்தல், மண்மாரி ஆகியவற்றால் தடையேற்படுமிடத்து, அதனை நிவிர்த்தி செய்து நிகழ்த்தும் கும்பாபிஷேகம் அநாவர்த்தன கும்பாபிஷேகம் ஆகும். நித்திய நைமித்திய கிரியைகள் முறையாக நடைபெற்று வரும் ஆலயத்தில், விமானம், கோபுரம், கருவறை, மண்டபம், பிரகாரம், பரிவாரக் கோயில்கள் விக்கிரகங்கள் பழுதடைந்தால் பாலஸ்தாபனஞ் செய்து, திருப்பணி மூலம் புனரமைத்து பிரதிஷ்டை செய்தல் புனராவர்த்தன கும்பாபிஷேகம் என்பர். ஆலயத்தில் மரணம் ஏற்பட்டாலும், ஆசௌசம் உள்ளவர்கள் ஆசாரக் குறைவானவர்கள் பிரவேசித்தல், திருடர் பிரவேசித்தல் போன்ற நிகழ்வுகள் ஏற்பட்டு பூசைகள் தடைப்படின், உடன் நிகழ்த்தப்படும் பிரதிஷ்டை 'அந்தரிதம்' எனப்படும்.

கும்பாபிஷேகம் இடையூறின்றி நிகழ விநாயகப் பெருமானை வழிபடுதல் முதன்மை பெறும். குணபதி வேதாகமத்தின் மூலம் இவ்வழிபாடு நிகழும். இதனைத் தொடர்ந்து கும்பாபிஷேகத்தை தலைமையேற்று நடத்தும் ஆசாரியரைத் தேர்ந்தெடுத்தலாகிய ஆச்சாரிய வர்ணம் நிகழும். தொடர்ந்து திரவிய பாகம், அநுக்ஞை, கிராமசாந்தி, பிரவேச பலி, ரசேஷாக்ன ஹோமம், திசாஹோமம், சாந்தி ஹோமம், மூர்த்தி ஹோமம், வாஸ்து சாந்தி, நவக்கிரக மகம், மிருத் சங்கிரகணம், அங்குரார்ப்பணம், ரஷாந்தனம், பிரசன்னாபிஷேகம், பிரசன்ன பூஜை, கடஸ் தாபனம், ஜலாதிவாசம், தான்யாதி வாசம், நயனோன் மீலனம், கிராம பிரதஷ்ணம், சயனாரோபணம், அக்கினி காரியம், நாமகர்ணம், பிம்ப பிரதஷ்ணம், பிம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம், எண்ணெயக்காப்பு, பிம்ப சுத்தி, ஷடத்துநியாசம், ஸ்பர்சாகுதி, யாத்ராதானம், கும்ப உத்வாசனம், ஸ்தூபிஸ் தாபனம், ஆவாகனம், கும்பாபிஷேகம், ஆசிர்வாதம், மகாபிஷேகம், தீபாராதனை, ஆசார்யோத்சவம், மண்டல பூஜை, மண்டல பூர்த்தி என்பன முக்கிய கிரியைகளாகக் கொள்ளப்படுபவை. இவ்வுன்னதமான கிரியையயடுத்து ஆலயத்தில் இறைவனுக்கு நித்திய நைமித்தியக் கிரியைகள் எதுவித தடையுமின்றி நிகழ்ந்து வருதல் அவசியமாகும்.

எனவே மக்களாகிய நாம் இக் கிரியைகளில் பங்கேற்று, ஆலய தரிசனம் செய்து வழிபாடியற்றி ஆன்ம ஈடேற்றம் அடைவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தன்

கவிஞர் குமார் இராமநாதன்

ஆலயங்கள் அமைத்து
ஆண்டவனைக் குடியிருத்தி
அடியவர்க்கு அன்னமீந்து
அற்புதமாய் வேள்வி செய்து
பொற்பதங்கள் நாடிவரும்
அருமைமிகு பக்தனொருவன்

ௐ

காலமெனும் நீரோடை
கரையிருந்து பிறவியெனும்
கடல்கடக்கும் எத்தனத்தில்
கையிலைமலைச் சாரல்களில்
பயிலும் பல யோகத்தால்
கடவுளைத் தேடும் ஒருவன்

ௐ

மாலைவரை வியர்வையினால்
மண்மகளை நீராட்டி
மற்றோரின் பசியைப் போக்கி
மாடாக உழைத்துயிரின்
கூடாகிப் போய்விட்ட
மக்களின் பக்தனொருவன்

ௐ

காலைக் கதிரவனாய்
கல்விப் பணிபுரிந்து
கற்றோரை உலகுக்கீந்து
கடமைதனை உயிராய்
மடமைதனை நீக்க
கைகொள்ளும் பக்தனொருவன்

ௐ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சம் வரும் நாளிலே
பசியென்று வருவோரின்
பட்டினியைத் தீர்க்கும் ஒருவன்
பாராது கடன்பட்டு
தாராளமாய் வழங்கி
பராரியாய்ப் போன ஒருவன்

ௐ

மஞ்சளொடு குங்குமம்
வழங்கிப் பல ஏழைகள்
வாழ்விற்கு ஒளிதந்த ஒருவன்
வாகான பண்புடைய
மாமேதை நூல்களை
வண்தமிழில் தந்த ஒருவன்

ௐ

கொஞ்சுதமிழ் அன்னைக்கு
கோபுரமாய்க் கவிதை
கொட்டிப்படைக்கும் ஒருவன்
கல்லாத ஒருமனிதன்
கல்விபற்றிப் பேசுவதை
கண்டுகொள்ளாத ஒருவன்

ௐ

அஞ்சாத நெஞ்சமொடு
ஆன்மீகப் பணியாற்றும்
ஆற்றலைக் கொண்டோரிவர்கள்
அன்போடு நஞ்சினைத்
தந்தாலும் உண்பதுவே
அவர்க்கு நாம் செய்யும் கடனே!
இதையும் ஆத் மீகம் என்பாய் என் மனமே.

ௐ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கியப் போக்கும் பல்லவர்காலப் பத்திப் பாடல்களும்

பா.பாலகுமார்
ஆசிரியர்
சரஸ்வதி மத்திய கல்லூரி.
பதுளை

தமிழ் இலக்கியம் தொன்மையானது, பண்பட்டது. வரலாற்றுச் சிறப்புடையது. பிறநாட்டினர் நாகரிக நிலையை எட்டாத காலத்திலேயே தனக்கே உரிய கலப்பற்ற தூய இலக்கியப் போக்கினைக் கொண்டு விளங்கியது. எனவே தமிழில் காணக்கிடகும் பழம் பாடல்களில் அக்கால இயற்கை அழகின் இனிமையும், மக்கள் வாழ்க்கை நெறியின் செம்மையும் புலப்படுகினறன. தமிழ் இலக்கியம் பற்றிக் குறிப்பிடவந்த பெஸ்கி பாதிரியார், தமிழ்ப் புலவர் ஆற்றல் சான்றல் மொழியினைக் கையாண்டனா். தமிழ்க் கவிதையில் சிறந்த பாட்டுக்கள் இறையுணா்வு பற்றியும், இறையருள் பற்றியும் காணப்படுகின்றன என்று கூறியுள்ளார். தமிழ் மொழி பெற்றுள்ள சிறப்புக்கள் பலவகைப்படும். உலகிலே கவி வளமுள்ள மொழிகள் பலவுளவெனினும் தமிழ் மொழியைப் போல கனிவுள்ள பக்திப்பாடல்களைப் பெருந்தொகையாகக் கொண்டுள்ள மொழி வேறில்லை என்றே கூறலாம். அது தமிழ் மொழிக்குள்ள ஒரு தனிச் சிறப்பாகும். உலக மொழிகள் எதனுள்ளும் இன்றுவரை காணமுடியாத பொருளதிகாரம் பற்றிப் பேசும் பகுதியைத் தன்னுள் அடக்கியுள்ள தொல்காப்பியம் இன்று நமக்குக் கிடைக்கும் நூல்களுள் மிகப்பழமையான இலக்கண நூலாகும். தனித் தன்மை பெற்று தொல்காப்பியம் விளங்குவது போலவே, சமய இலக்கியம் என்ற பகுதியும் தனித்தன்மை பெற்று விளங்குகின்றது.

தமிழ் இலக்கிய வரலாற்றினை ஆழமாக நோக்குவோர்க்கு ஒருண்மை புலனாகும். நீண்டகாலமாகத் தமிழிலக்கியமும் சமயச் ஒன்றுடனொனறு இணைந்து வளர்ச்சி பெற்றுவந்துள்ளன என்பதாகும். தமிழ் இலக்கிய வரலாற்றைக னால அடிப்படையில் வகுத்துள்ள இலக்கிய வரலாற்றாசிரியர்கள் கூட சமயவரலாற்றுப் பகைப்புலத்தில் வைத்தும் தமது காலப் பகுப்பை வகுத்துள்ளனா் என்பது நோக்கத் தக்கதாகும். சங்கமருவிய காலத்திலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியிற் சமயச் சார்பே தமிழ் இலக்கியங்களில் முதன்மை பெற்று விளங்கியமையை காணமுடிகின்றது. ஒவ்வொரு காலப்பகுதிகளிலும் அக்காலச் சூழ்நிலைக்கேற்ப வெவ்வேறு சமயங்கள் தம்முட் போட்டியிட்டும், வளர்ச்சியெய்தியும், பின்தங்கியும் வந்துள்ளதை தமிழ் இலக்கிய வரலாறும், சமய வரலாறும் நன்கு உணர்த்துகின்றன.

தமிழ் நாட்டில் வாழ்ந்த பல்வேறு சமயத்தினரும் தத்தம் கடவுளரையும் சமயக்குரவா்களையும் போற்றிப் பாடிய பாடல்கள் தமிழில் பலவுள. எனினும் சைவம், வைணவம் ஆகிய இரு பக்தி மார்க்கங்களுக்கும் உரிய பக்திப்பாடல்களே அவற்றுட் பெரும்பாலானவை. அவற்றுள்ளும் பல்லவர்காலப் பகுதியில் எழுந்த பக்திப் பாடல்களைப் போன்ற சுவைமிக்க பாடல்கள் ஏனைய காலப்பகுதிகளில் தோன்றவில்லையென்றே கூறலாம். இந்த வகையில் இக்காலத்தை சைவ, வைணவ எழுச்சிக் காலமென்று கூறுதல் பொருத்தமானதாகும். இறைவனைப் பற்றிய பாடல்கள் தமிழிலே பொதுவாக எல்லாக் காலங்களிலும் இருந்திருக்கின்றன. ஆனால் அவ்வக்கால சூழ்நிலைக்கேற்ப அப்பாடல்களின் இயல்புகளும் வேறுபட்ட பண்புகளைக் கொண்டனவாகக் காணப்படுகின்றன என்பதை இலக்கியங்கள் எழுந்த காலகட்டங்களின் பின்னணியில் நோக்குவதன் மூலமே அறிய முடியும். இந்த அடிப்படையில் சங்ககாலம் முதலாகப் பல்லவர் காலம் வரையிலான இலக்கியப் போக்கினைச் சுருக்கமாகப் பார்ப்பதும் பல்லவர் காலப் பக்திப் பாடல்களின் சிறப்புக்கள் சிலவற்றை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இலக்கிய வரலாற்றில் கி.மு முதல் மூன்று நூற்றாண்டுகளைக் கொண்ட சங்ககாலப் பகுதியில் எழுந்த இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு நோக்கும் போது சங்ககாலத் தமிழ் மக்களின் வாழ்க்கை தமிழ் நாட்டிற் காணப்பட்ட ஐவகை நிலப்பாகுபாட்டிற்கு ஏற்ப அமைந்திருப்பதை அறிய முடிகின்றது. சூழ்நிலைக்கேற்பவே வாழ்க்கை அமைகிறது என்பதிற்கிணங்க சங்ககால மக்கட் பாகுபாடும் வாழ்க்கையும், ஒழுக்கமும் இயற்கைக்கு ஏற்பவே அமைந்திருந்தன. இயற்கை நெறிக்கால இலக்கியம் மக்கள் ஒழுக்கத்தையே பொருளாகக் கொண்டமைந்திருந்தது. மக்கள் யாவருக்கும் இயல்பாக அமைந்த காதலுணர்ச்சியும், வீர உணர்ச்சியுமே அக்கால இலக்கியங்களில் சிறப்பிக்கப்பட்டன. அக்கால அகத்திணை இலக்கியப் பொருள் மரபு முதற் பொருள் கருப்பொருள், உரிப்பொருள் என வகுக்கப்பட்டது. உரிப்பொருளாகிய ஒழுக்கம் நிகழுதற்கு முதற் பொருள் நிலைக்களமாகவும், கருப்பொருள் அதற்கு உதவுமாறும் செய்யுட்கள் செய்யப்பட்டன. புறத்திணைச் செய்யுட்களில் அரசனின் ஆட்சிச் சிறப்பு, கொடைத் தன்மை, வெற்றிக்களிப்பு என்பன சிறப்பாகப் பேசப்படுகின்றன.

சங்க காலத்தில் எழுந்த இலக்கியங்கள் கூடுதலாக உலகியல் வாழ்க்கையையே முதன்மைப்படுத்தி எழுந்துள்ளனவாயினும் இயற்கையோடு பொருந்திய முறையில் வாழ்ந்த மக்கள் அதற்கேற்ப தமது சமய வாழ்வினையும் மேற்கொண்டனர் என்பதையும் நன்கு அறியமுடிகின்றது. சங்க இலக்கியங்களில் முருகன், கொற்றவை, சிவன், திருமாள், இந்திரன், வருணன், இலக்குமி முதலான தெய்வங்கள் போற்றப்பட்டு உள்ளன. எனினும் சங்ககால மக்களின் வாழ்க்கைக் கூறுகளோடு இணைந்த முக்கிய தெய்வங்களாக முருகனும் கொற்றவையும் விளங்கின இக்காலத்தில் எழுந்த இலக்கியங்களில் திருமுருகாற்றுப்படை, பரிபாடல் என்பன குறிப்பிடப்பட வேண்டியனவாகும். இறை புகழை முழுமையாகப் புலப்படுத்தும் இலக்கியமாகத் திருமுருகாற்றுப்படையே விளங்குகின்றது. இவ்விலக்கியத்தில் முருகன் தொடர்பாகத் தமிழரின் பழைய வழிபாட்டுக் கூறுகளும், ஆரியத் தொடர்புடைய சுப்பிரமணியனின் தெய்வீக அம்சங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு முருகனின் புகழ் பாடப்பட்டுள்ளது. தமிழ் இலக்கியத்தில் இறைபுகழ் பேசப்படுவதற்கு முன்னோடியாக அமைந்த பிறிதொரு நூல் பரிபாடலாகும். செவ்வேளும் திருமாளும் இவ்விலக்கியத்திற் புகழ்பாடும் முதன்மையான தெய்வங்களாக விளங்குகின்றன.

சங்க காலத்தை அடுத்து தமிழ் இலக்கிய வரலாற்றில் குறிப்பிடப்படும் காலப்பகுதி சங்கமருவிய காலமாகும். இக்காலத்தில் தோற்றம் பெற்ற கீழ்க்கணக்கு நூல்கள், காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள் அக்காலச் சூழ்நிலைக்கேற்ப மாற்றமடைந்து செல்வதைக் காணலாம். சங்கமருவிய காலத்தில் களப்பிரராகிய அன்னியர் தமிழ் நாட்டைக் கைப்பற்றி ஆண்டனர். இவர்களின் ஆதரவு சமண, பௌத்த துறவிகளுக்கு நன்கு கிடைத்தது இந்நிலையில் அன்னிய மன்னர், அந்நிய மதம், தமிழ் நாட்டின் சீரழிந்த வாழ்க்கை முறை முதலியன இக்காலப்பகுதியில் அறம், நீதி, ஆசாரம், ஒழுக்கம் முதலான கருத்துக்களைச் சுமந்தவண்ணம் இலக்கியங்கள் தோற்றம் பெறக் காரணமாக அமைந்தது. இக்கால இலக்கியங்களில் மேற்கூறிய அறக் கருத்துக்கள் பல்வேறுவகையில் வெளிப்பட்டு நிற்கின்றன. பெரும்பாலான இலக்கிய கர்த்தாக்கள் சமண, பௌத்த துறவிகளாக இருந்த காரணத்தினால் இக்கால இலக்கியங்களில் அவ்வச் சமயதத்துவக் கருத்துக்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ பொதிந்திருப்பதைக் அவதானிக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கமருவிய காலக்கட்டத்துச் சமுதாயப் போக்கைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்த அற இலக்கியங்களும் சமயச் சார்பு உள்ளவையே. அத்தகையவற்றுள் முதன்மை நிலைவகிக்கும் திருக்குறள், தனது சமயச் சார்பினை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாது, பொதுவான இறையின் புகழைப் பேசுகின்றது. திருக்குறளின் கடவுள் வாழ்த்து இதனையே உணர்த்துகின்றது. ஒவ்வொரு சமயத்தவரும் திருக்குறள் தமது சமயச் சார்பானது என்று கருதத்தக்க வகையில் அந்நூலின் கடவுள் வாழ்த்து அமைந்துள்ளது. உலகப் பொதுமறை எனத் திருக்குறள் போற்றப்படுவதற்கு முக்கியக் காரணம், வள்ளுவர் தமது சமயச் சார்பினைப் புலப்படுத்துவதை விடவும் இறைபுகழை எடுத்தியம்புவதை நோக்கமாகக் கொண்டமையேயாகும்.

அறநூல்கள் கூடுதலாக தோற்றம் பெற்ற சங்கமருவிய காலத்திலே தொடர்நிலைச் செய்யுட்களும் அகப்பொருள், புறப்பொருள் நூல்களும் எழுந்தன என்பதும் குறிப்பிடப் படவேண்டியதொன்றாகும். தமிழ் இலக்கிய வரலாற்றில் முதலில் காப்பியங்கள் தோற்றம் பெற்ற காலமாக சங்கமருகிய காலம் விளங்குகின்றது. இக்காலப் பகுதியில் சிலப்பதிகாரம், மணிமேகலை முதலான காப்பியங்கள் எழுந்தன. இக்காலச் சூழ்நிலைக்கேற்ப இக்காப்பியங்களும் சமண, பௌத்த அறக்கருத்துக்களைக் கதைவடிவில் வெளிப்படுத்துவனவாகக் காணப்படுகின்றன. சிலப்பதிகாரம் பத்தினித் தெய்வத்தின் புகழ் கூறும் இலக்கியமாகவும் விளங்குவதைக் காணலாம். குடும்பப் பெண்ணான கண்ணகி தெய்வீக ஆற்றல் பெற்ற பாத்திரமாக வளர்க்கப்பட்டு இறுதியில் தெய்வமாகப் போற்றப்படுவது இங்கு நோக்கத்தக்கதாகும்.

தமிழ் இலக்கிய வரலாற்றுப் போக்கில் சங்கமருவிய காலப் பிற்பகுதி குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும். இலக்கியப் பொருள் வடிவம், யாப்பமைதி முதலானவற்றில் தனித்துவமான மாற்றங்களை உள்வாங்கிய காலப்பகுதியாக இப்பகுதி அமைகின்றது. சமய வரலாற்றிலும், தமிழ் இலக்கிய வரலாற்றிலும் திருப்புமுனையாக அமைந்த பல்லவர்கால பக்தி இயக்கத்தின் ஊற்றினை சங்கமருவிய கால இறுதியிலே கண்டுணர முடிகின்றது. கி.பி. ஆறாம் நூற்றாண்டிலே வாழ்ந்த சைவ அடியவராகிய காரைக்காலம்மையாரும், வைணவ முதல் ஆழ்வார்களான பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகியோரும் பக்தி இயக்க ஊற்றின் அடிப்படைகளாக விளங்கினர். காரைக்காலம்மையாரின் வரலாறு பெரியபுராணத்தில் அறுபத்தாறு பாடல்களில் கூறப்பட்டுள்ளது. இவர் இயற்றிய நூல்கள் அற்புதத் திருவந்தாதியும், திருவிரட்டை மணிமாலையும், திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் இரண்டுமாகும். சிவபெருமானின் ஒப்பற்ற உயர்நிலையினை விளக்கும் பாடல்கள் இவை. அந்தாதித் தொடையமைந்த வெண்பாவும், கட்டளைக் கலித்துறையுமாயமைந்த பாடல்கள் இவைகளாகும்.

